# யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
## இலங்கை

### சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை
### 2000

# மனித உன்னதத்திற்கான கல்வி

**வாழ்நாட் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம்**


வெளியீடு:
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்

M. Premachandran
SUB WARDEN
BALASINGHAM HALL
UNIVERSITY OF JAFFNA
JAFFNA.

# மனித உன்னதத்திற்கான கல்வி

வாழ்நாட் பேராசிரியர் செல்லத்துரை
சிவஞானசுந்தரம்

# சேர். பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை

## 14.10.2000

வெளியீடு
யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம்
திருநெல்வேலி
யாழ்ப்பாணம்.

TITLE: EDUCATION FOR HUMAN EXCELLENCE

AUTHOR: PROF. C. SIVAGNANSUNDRAM

PUBLICATION BY: REGISTRAR'S OFFICE,
UNIVERSITY OF JAFFNA,
SRI LANKA

PAGES: 34

© : AUTHOR

## முன்னுரை

யாழ்ப்பாணத்தில் ஒரு பல்கலைக்கழகம் அமைய வேண்டும் என்று பரமேஸ்வரன் ஆலயத்துடன் கூடிய பெரும் நிலப்பரப்புகளைக் கொண்ட பரமேஸ்வராக் கல்லூரியை கட்டி எழுப்பிய பொன்னம்பலம் இராமநாதன் பெரியார் அவர்களின் நினைவுப் பேருரை, பல்கலைக்கழக பெருநாளாம் பட்டமளிப்பு விழாவைத் தொடர்ந்து நடைபெறுவது சிறப்பாகும்.

உன்னதமான சிந்தனைத் தெளிவுடன் செயல் புரிந்த கல்விமான், பரமேஸ்வர பக்தன், சேர்.பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை இவ்வாண்டு "மனித உன்னதத்திற்கான கல்வி" என்னும் தலைப்பில் நிகழ்த்தப்பட்டது பெரும் பொருத்தம். அதையும், மனித மேம்பாட்டிற்ககான கல்வி என்னும் முறைமையை பள்ளிக்கூட பாடங்களுக்கூடாக எவ்வாறு செயல்படுத்தலாம் என்று, ஆசிரியர்களுக்கு அகில இலங்கை ரீதியாக பயிற்சியளிக்கும் பேராசிரியர் செல்லத்துரை சிவஞானசுந்தரம் அவர்கள் நிகழ்த்தியமை சாலச் சிறந்ததாகும்.

பேராசிரியர் அவர்கள்,தமிழறிஞர் ராஜாஜி அவர்களால் "நந்தி" என்னும் புனைப்பெயர் வழங்கப் பெற்று, நந்திக் கொடியுடை யாழ்ப்பாணத்திற்கும், நந்தி இலச்சினை கொண்ட யாழ்ப்பாண பல்கலைக்கழகத்திற்கும், தனது அறிவாற்றல், எழுத்தாற்றல் மூலம் பெருமை சேர்ப்பவர். இவரது ஆய்வு நூல், மருத்துவ மாணவர்களுக்கு பாடப்புத்தகமாகவும், கதைகள் சிறுபிள்ளைகளுக்கான நல் நெறிப் புத்தகங்களாகவும், பாடப்புத்தகங்களிலும் பரந்து பட்டதாக பல மட்டங்களிலும் விரும்பி ஏற்றுக் கொள்ளப்படுகின்றன.

உலக சுகாதார ஸ்தாபனத்தின் ஆலோசகராகவும், இலங்கை சாகித்திய சபையினால்

பலமுறை கௌரவிக்கப் பட்டவராகவும், ஸ்ரீசத்தியசாயிபாபாவின் அருள் மழையில் முற்றாக திளைப்பருவமான "நந்தி" அவர்களின் இப்பேருரை இன்று திசை மாறிப் பறக்கும் எமது கல்வி நிலையை அன்புவழியில் நிலைப்படுத்தி சாந்தி அஹிம்சையை நோக்கிச் செலுத்த வேண்டிய அவசியத்தை உணர்விக்கின்றது.

பேராசிரியர்.பொ.பாலசுந்தரம்பிள்ளை
துணைவேந்தர்

## சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை

# மனித உன்னதத்திற்கான கல்வி
# (Education for Human Excellence)

மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களே,
வணக்கத்திற்குரிய மத குருமார்களே,
பரமேஸ்வரா அறக்கட்டளைச் சபையோரே,
பல்கலைக்கழக பேரவை உறுப்பினர்களே,
சகோதரிகளே, சகோதரர்களே,
அன்பிற்குரிய மாணவர்களே,
வணக்கம்.

# மனித உன்னதத்திற்கான கல்வி
# (Education for Human Excellence)

## அறிமுகம்

இன்று உங்கள் முன் *மனித உன்னதத்திற்கான கல்வி* என்ற விடயம் பற்றிப் பேசுவதற்கு இறைவன் அருள் அளித்ததைக் குறித்து மிகவும் மகிழ்கிறேன். அதனை சேர்.பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரையாக நிகழ்த்தும்படி என்னை அழைத்து கௌரவித்த, யாழ். பல்கலைக்கழகம், பரமேஸ்வரா அறக்கட்டளை சார்ந்த அமைப்பாளருக்கு, எனது மனமார்ந்த நன்றியைத் தெரிவித்துக் கொள்கிறேன்.

ஆரம்பத்தில், *மனித உன்னதத்திற்கான கல்வி* என்ற விடயத்தை இந்தப் புதிய நூற்றாண்டின் முதலாவது இராமநாதன் பேருரையாக நான் தெரிவு செய்ததன் முக்கிய காரணங்களைக் கூற விரும்புகிறேன், ஏனெனில் எனது உரை அந்தக் காரணங்களையும், அவை சார்ந்த சிந்தனைகளையும், செய்ய வேண்டிய காரியங்களையும் வைத்தே அமைகின்றது.

முதலாவதாக, மனித வாழ்வை மேம்படுத்தும் அதிமுக்கிய காரணங்களில் ஒன்றான கல்வியின் நோக்கங்களை, காலத்திற்கு ஏற்ப ஆராய்ந்து, மதிப்பீட்டு, தீர்மானிப்பது ஒரு தேவையாகும். அந்தத் தேவை இந்தக் காலத்தில் மிகவும் அழுத்துகின்றது.

மாபெரும் முன்னேற்றங்களை மிகக் குறுகிய காலத்தில் கண்ட சென்ற நூற்றாண்டு, அதன் முடிவில் மனத்திலே அன்பும் அமைதியும் இல்லாத, தடுமாற்றமுள்ள ஒரு மனித குலத்தையே விட்டுச் சென்றுவிட்டது. ஆகவே மனிதனின் கல்வியியல் கொள்கைகளின் வளர்ச்சியையும் இன்றைய நிலையையும் சிந்தித்து, தவறுகளுக்கு வழிவகுத்த காரணங்களையும், தவறிய பாதையையும், பரிகாரத் தையும் இனம் காண வேண்டிய நேரம் இதுவாகும்.

சென்ற ஆண்டு இந்தப் பேருரையை நிகழ்த்திய பேராசிரியர் வ ஆறுமுகம் அவர்கள் *இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்வியும் தேசிய ஒருங்கிணைப்பும்* பற்றிப் பேசும் போது, நமது தேசிய வாழ்வில் உள்ள குறைபாடுகளை எடுத்துக்காட்டினார். நமது நாட்டில் சாந்தியும் சமாதானமும் இன்றியமையாதன என்றும், அதற்கு, மனிதனை மனிதனாக மதிக்கும் மனப்பாங்கும், மக்கள் பண்பும், மனித நேய உணர்வும், மனித விழுமியங்களும் மேம்பாடுகளும் இளம் தலை முறையினர் ஊடாக சமூகத்தில் ஆழமாக நாட்டப்பட வேண்டும் என்றும் கூறினார். அதில் இதுவரை கல்வி சாதித்ததைவிடச் சாதிக்க வேண்டியவை எவ்வளவோ இருக்கின்றன என்பதை நாம் மறக்கக்கூடாது என்றும், மறந்தால் வருங்கால சமூகம் நம்மை மன்னிக்காது [1] என்றும் அவர் கூறியதை உங்கள் ஞாபகத்தில் கொண்டுவர விரும்புகிறேன்.

எனது உரையை அந்த நிலைப்பாட்டிலிருந்து, முன்னெடுத்து செல்ல விரும்புகிறேன்.

மனித உன்னதத்தைப் பற்றிப் பேசுவதற்கு ஆசை கொண்ட நான், அதற்கு இந்த மேடையை மிகவும் உகந்ததாக கருதுகிறேன். சென்ற நூற்றாண்டில் நமது நாட்டிலே, மனித மேம்பாடுகளில் சிறந்து உன்னதமான ஒரு வாழ்வு வாழ்ந்த ஒரு பெரியார், பொன்னம்பலம் இராமநாதன் அவர்கள். அவரின் பெயர் கொண்ட பேருரைக்கு, இந்த விடயம் பொருத்தமாக எனக்குத் தோன்றுகிறது.

## பொன்னம்பலம் இராமநாதன்

இராமநாதன் பெரியாரை, பல பரிமாணங்களில் பார்க்கும் போது, அவரின் ஆளுமை ஒவ்வொன்றிலும் உயர்ந்து மிளிர்வதை அவதானிக்கலாம். இந்தப் பேருரை வரிசையிலே முன்னம் பேசிய பேச்சாளர்கள், இராமநாதன் பெருந்தகையை ஒரு தேசிய தலைவராக, தேச பக்தராக, திறமையான நிர்வாகியாக, சட்ட நிபுணராக, கல்விமானாக, அத்மீக செம்மலாக, தத்துவஞானியாக, பொன்மொழிப் பேச்சாளராக, திருக்குறள் வித்தகராக என்றெல்லாம் குறிப்பிட்டுள்ளார்கள். இராமநாதன் ஐயாவுடைய சரிதத்தைப் படிக்கும் எவரும், அவர் இந்தத் தகமைகளுக்கு மிகவும் பொருத்தமானவர் என்பதை உணர்வர்.

அவரின் சரிதையை இரு பகுதிகளாக மிகவும் செழிப்புடனும் சத்தியத்துடனும் எழுதி எதிர்காலச் சந்ததியினருக்குத் தந்த உயர் திரு. வைத்திலிங்கம் அவர்களுக்கு நாம் மிகவும் கடமைப்பட்டுள் ளோம். இராமநாதன் பேருரை நிகழ்த்துபவர் யாராகிலும் வைத்திலிங்கம் அவர்களுக்கு இதயபூர்வமாக நன்றி செலுத்தாமல் இருக்கமுடியாது. சேர் பொன்னம்பலம் இராமநாதன் ஓர் உன்னதமான மனிதன், கல்விக்கு முன்னுருமை தந்த கல்விமான். கல்வியின் நோக்கம் பற்றி மிகவும் தெளிவான கருத்து கொண்டவர். பரமேஸ்வரா கல்லூரியின் அரசியல் யாப்பை பிரகடனம் செய்யும் கட்டளைச் சட்டத்தை பிரேரிக்கும் வேளையில், இலங்கைச் சட்டசபையில் பேசும்போது 'கல்வியின் மிக முக்கியமான பங்காவது பிள்ளைகள் இரு பாலாரையும் ஒழுக்கத்தின் உன்னத குறிக்கோளை வைத்துப் பயிற்றுவிப்பதுதான்' என்று கூறினார் [2] அந்த குறிக்கோளை அடைவதற்கு அத்தகைய கல்வி ஆத்மீகத்தின் அனுசரணையுடன் இருக்க வேண்டும் என நம்பினார். அவருடைய சிந்தனையும் பேச்சும் எழுத்தும், நவின்றோர்க்கினிமை தருவதாக இருந்தன. அவரின் பேச்சுக்களைக் கேட்ட ஐரோப்பாவும், அமெரிக்காவும் அவரை ஓர் உயர்ந்த ஆசிரியர் என்றும், கடவுளைப் பார்த்தும் ஸ்பரிசித்தும் ஞானம் பெற்றவர்களில் ஒருவர் என்றும் புகழ்ஆரம் சூட்டின. [3]

பெரியோர்களே, சகோதரிகளே, சகோதரர்களே
அத்தகைய ஒரு மாமனிதனின் நினைவுப்பேருரை நாளிலே, மிகவும் அடக்கமாக, எனது சிற்றுரையை உங்கள் முன் சமர்பிக்கிறேன்.

## மனித உன்னதம் (Human Excellence)

மனித உன்னதம். விளக்குவதற்கு எவ்வளவு கஷ்டமான சொற்பதம். மிகவும் சுருக்கமாக கூறுவதானால் தமிழின் குறள் தான் உதவுகின்றது.

*வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வானுறையும்*
*தெய்வத்துள் வைக்கப்படும் .* (குறள் 50 )

உலகத்திலே வாழவேண்டிய அன்பு நிலையிலும், அறநெறியிலும் நின்று வாழ்கின்றவன், தெய்வமாகவே கருதப்படுவான். அந்த அன்பு நிலையையும் அறிவு நெறியையும் எடுத்து காட்டி, மனிதனில் உள்ள தெய்வீகத்தை மலர வைப்பதே மதவேதங்களின் நோக்கம் ஆகவும், கல்வியின் திட்டமாகவும் அது இருக்கவேண்டும். தன்னுள் உள்ள தெய்வீகம் மலரும் போதுதான் மனிதன் உன்னத நிலையை அடைகின்றான்.

இந்திய ஆத்மீக சிந்தனையில் உபநிஷத காலம் தொடக்கம், பல கால கட்டங்களில், இந்த உண்மையை மக்கள் அறியவும் உணரவும்

ஆத்மிகவியலாளர் போதித்து வந்துள்ளனர். உயநிஷத ரிஷிகள், மனித உன்னதமான ஒரு நிலையை சுதந்திரமாகவும் பரிபூரணமாகவும் அனுபவித்ததாக அறிகின்றோம். அவர்கள் எவ்விதமான இறுக்கமான மதக் கொள்கைகளுக்கோ, அரசியலின் அழுத்தங்களுக்கோ, சமூகத்தின் நிர்ப்பதங்களுக்கோ, தமது ஆளுமையின் சார்புகளுக்கோ, தாம் கொண்ட உன்னதமான இலக்குகளைக் கீழ்ப்படிய விடவில்லை.[4] அவர்கள் கண்ட மிகப் பெரிய கண்டுபிடிப்புகள், தெய்வீகத்தின் உண்மையும், மனித ஆத்மாவின் வியாபகமும், அனைத்து உயிர்களின் ஆத்மீக ஒற்றுமையும் தான்.

அவர்களின் உள்ளுணர்வும் சிந்தனையும் தந்த ஞானத் தொடர்பாக, மனித வாழ்வின் உன்னதம், செயற்பாடு, எதிர்காலம் என்பனவற்றிற்கு பகவத் கீதை வழிகாட்டியது. கீதையின் செய்தி முழுமையான ஆத்மீக செயற்பாட்டை விளக்குவதாகும். மனிதனில் ஏற்கனவே இருக்கும் தெய்வீகத்தை உணர்ந்து அறிவது என்ற குறிக்கோளை கீதை மிகவும் அடிப்படையான ஒன்றாக வலியுறுத்துகிறது. மனிதன் தனது தெய்வீகத்தை உணர்வதற்கு, எங்ஙனம் தனது உடல், உயிர் சார்ந்த தடைகளை மீறி செயற்பட முடியும் என்பதையும், அதற்காக அவன் அறநெறி, ஆத்மீக வழி என்ற ஒழுக்கம் கடைப்பிடித்து, உள்நோக்கிய தியானம் மூலமும் வேறு யோக பயிற்சிகள் மூலமும் சாதிக்க முடியும் என்பதைக் கீதை கற்பிக்கின்றது. இதுதான் முக்தி, அல்லது ஆத்மிக விடுதலை எனப்படுகிறது.[5]

மனித உன்னதம் நோக்கிய குறிக்கோளானது, அரசியல் பொருளாதாரம், அறிவியல், அறவியல், கலை, விஞ்ஞானம், மதம் ஆகிய சகல துறைகளிலும் அடிப்படையாக இருக்க வேண்டும். அது மனிதன் தனது கீழ்மையை வென்ற நிலையாகும்.[6]

## மதிப்புகளும் மனித மேம்பாடுகளும் (விழுமியங்கள்)

மனிதன் உன்னத நிலையை அடைவதற்கு ஊற்றாக இருப்பது அவன் மதிக்கும் தகைமைகளும் செயற்பாடுகளும் தான். நாம் எதை மதிக்கிறோமோ, அதுவே ஆகின்றோம். மனிதத் தன்மை என்பது நல்ல மதிப்புகளை, அதாவது மேம்பாடுகளைக் கொண்டுள்ள நிலைப்பாடு ஆகும். நமது வாழ்விலே, நாம் தேர்ந்து கொண்ட கொள்கைகள் , எடுத்துகொண்ட முயற்சிகள், சார்ந்த துறைகளுக்கு ஏற்ப, மதிப்புகளை நிர்ணயிக்கிண்றோம். ஆகவே மதிப்பீடுகளை பலவிதங்களில் வகுக்கிறார்கள். ஓர் உதாரணமாக, சமூக கல்வி கற்பிப்பதற்கு

UNESCO தயாரித்த ஒரு கைநூலிலிருந்து,[6] சில மதிப்புகள் பிரிவுகளும், அவை சார்ந்த மேம்பாடுகளும் அட்டவணை 1 இல் தரப்பட்டுள்ளன:

**அட்டவணை 1 : மதிப்புகளின் பிரிவுகளும் மாதிரி மேம்பாடுகளும்**



© பேராசிரியர். செ.சிவஞானசுந்தரம்

| மதிப்புகளின் பிரிவு (Category of value) | மாதிரி மேம்பாடுகள் (Sample values) |
|---|---|
| 1 உடல், பொருள் | சுகம், ஆறுதல் , பாதுகாப்பு |
| 2 பொருளாதாரம் | உற்பத்தி, திறன் |
| 3 அறநெறியல் | உண்மை, திறன் |
| 4 சமூகவியல் | மரியாதை, பெருந்தன்மை |
| 5 அரசியல் | நீதி, சுதந்திரம் |
| 6 அழகியல் | அழகு, சீர்மை |
| 7 ஆத்மீகவியல் | பக்தி, மனச்சாட்சி |
| 8 அறிவியல் | புத்தி, தெளிவான சிந்தனை |
| 9 உத்தியோகவியல் | மதிப்பு, வெற்றி |
| 10 மனோபாவம் | அன்பு, விருப்பம் |

இங்கே தரப்பட்டுள்ள மதிப்புகளின் பிரிவுளும், அவை சார்ந்ததாக தெரிவுசெய்யப்பட்ட மேம்பாடுகளும், ஓர் அறிவியல் கோட்பாட்டின்படி வகுக்கப்பட்டிருக்கின்றன எனக் கருதுகிறேன். நடைமுறையில், அந்த அந்த மதிப்புகளின் பிரிவுகளைச் சார்ந்த துறையினர், அறிவியலாளரால் இனம் காணப்பட்ட மேம்பாடுகளுக்கே அழுத்தம் கொடுப்பர். மற்ற மேம்பாடுகளுக்கு அழுத்தம் குறைக்கப்படும், அல்லது அவை முற்றாக விடப்படலாம்.

உதாரணமாக, பொருளாதாரம் சார்ந்த துறையினர், தமது செயற்பாடுகளில், இங்கே தரப்பட்டுள்ள உற்பத்தி (productivity), திறன் (efficiency) ஆகியன போன்ற மேம்பாடுகளுக்கே அழுத்தம் கொடுப்பர். மற்ற மேம்பாடுகளான உண்மை, நேர்மை, மரியாதை, பெருந்தன்மை போன்றவற்றிற்கு அழுத்தம் குறையலாம். மனசாட்சி அன்பு போன்ற மேம்பாடுகள் அவர்களின் செயல்களிலே கவனிக்கப்படாமல் விடப்படலாம்.

அதேபோல, அறிவியல் துறைசார்ந்த ஆசிரியர்கள் மாணவருக்குக் கல்வி கற்பிக்கும் போது புத்தி, தெளிவான சிந்தனை, இவற்றினால் மாணவன் அடையும் பெறுபேறுகள் இவற்றைப்பற்றியே கருத்தில் கொள்வர். கல்வியின் நோக்கு முக்கியமாக உத்தியோகமே என முன்னுரமை கொடுப்பின், உத்தியோக மதிப்பு, வெற்றி ஆகிய மேம்பாடுகளுக்கும் அழுத்தம் கொடுப்பர். அங்கேயும் உண்மை, நேர்மை, அன்பு, பெருந்தன்மை ஆகியன சில்லறைகள் ஆகலாம்.

அரசியல்வாதிகள் உண்மை, நேர்மை, மனசாட்சி போன்ற மேம்பாடுகளுக்கும் தமக்கும் தொடர்பு இல்லை என்று கருதும்போது, அரசியலில் பேசப்படும் நீதி, சுதந்திரம் ஆகிய மேம்பாடுகள் வெறும் சுலோகங்கள் ஆகிவிடுகின்றன.

பகவான் சத்ய சாயி பாபா கூறுவார்:

*கொள்கைகள் இல்லாத அரசியல்*
*ஒழுக்கம் இல்லாத கல்வி*
*மனிதாபிமானம் இல்லாத விஞ்ஞானம்*
*அறநெறி இல்லாத வணிகம்*
*இவை பிரயோசனம் அற்றவை மட்டுமல்ல,*
*அவை கண்டிப்பாக ஆபத்தானவை.*

– They are not only useless, but are positively dangerous.

1992 ஆம் வருடம் கலாநிதி. S K சண்முகநாதன் 'VALUES IN POLITICS' என்ற விடயத்தை இராமநாதன் பேருரையாகத் தந்த முடிவில், சாயி பாபாவின் இந்த ஆணித்தரமான கூற்றை எடுத்து உரைத்தது உங்கள் ஞாபகத்தில் இருக்கலாம்.

நான் மேற்கோள் காட்டிய சமூகக்கல்வி கற்பிப்பது பற்றிய UNESCO கைநூலிலே, மதிப்புகள் (values) காலத்திற்குக் காலம், கலாச்சாரத்திற்கு கலாசாரம் மாறுபடும் என்று கூறப்பட்டுள்ளது. இனி, ஒரே மதிப்பு அல்லது மேம்பாடு, உதாரணமாக *பெண்களுக்கு மரியாதை* என்ற மேம்பாடு மனித இன முழுமைக்கும் பொதுவானது ஒன்றாகத் தோன்றினாலும், நடைமுறையில் கலாச்சாரங்களிலே மிகவும் மாறுபடுகின்றது என்று காட்டப்பட்டுள்ளது.

மேலும், தனி மனிதனுடைய மேம்பாடுகள் சார்ந்த எண்ணமும் செயலும், சமூகத்தின் மேம்பாடுகளின் சாயல் அல்லது பிரதிபலிப்பு என்று கருதுவது தவறு என்றும் கூறப்பட்டுள்ளது.

அறிவியல் சமூகவியல் சார்ந்த இந்தக் கூற்றுக்களை நோக்கும் போது, மனித உன்னதத்திற்கான ஒரு கல்விக்கு உகந்த சிந்தனை, இத்தகைய பார்வைகளுக்கு அப்பாற்பட்டதாகவும் இருக்க வேண்டும் என்பது புலனாகின்றது. ஏனெனில், மனித உன்னதத்திற்கான மேம்பாடுகள் எங்கும், எக்காலதிலும் மாறுபடுவதில்லை. உன்னத மேம்பாடுகள் வழியிலான சிந்தனை, சொல், செயல் ஆகியன ஒன்றிணைந்ததாகவே இருக்கம். மேலும், அத்தகைய மேம்பாடுகள் தனிமனிதனிலிருந்து ஊற்றாகி, குடும்பம் சமூகம் என விரிந்து, உலகத்தின் பொதுச் சொத்தாக வேண்டும். அத்துடன் மனித வாழ்வின் எல்லா இயல்களும் கலைகளும், இயல்புகளும், நடைமுறைகளும் அவற்றின் அநுசரணையிலேயே இயங்கும். அவை எல்லா மதங்களின், மதத் தலைவர்களின் அறிவுரைகளின் சாரமாகவும் இருக்கும். சுருக்கமாக கூறுவதானால் அவை ஆத்மீகத்தின் வெளிப்படையாக மிளிரும். அந்த மேம்பாடுகளை, மனித மேம்பாடுகள் (Human values) என்று சத்திய சாயி பாபாவினால் இனம் காணப்பட்டுள்ளன.

மனித மேம்பாடுகள் பற்றி கூறுவதற்கு முன், இதுவரை அறிவியலாளர்கள் மனிதனையும் அவன் சமூகத்தையும் வைத்து வகுத்த கோட்பாடுகளுக்கு, ஆத்மீக சிந்தனையில் தோன்றும் திருத்தங்களை காட்ட விரும்புகிறேன். இவை சத்ய சாயியின் அறவுரைகளிலிருந்து டொக்டர். S P ராஹுலா தொகுத்தவை ஆகும் [7] *(அட்டவணை 2 )*

*அட்டவணை 2*
மனிதன் : அறிவியல் - ஆத்மீக பார்வைகள்

| | அறிவியல் பார்வை | ஆத்மீக சிந்தனை |
|---|---|---|
| 1 | மனிதன் ஒரு மிருகம் | மனிதன் தெய்வம் உள்ளவன் |
| 2 | மனிதவாழ்வின் அடிப்படை அலகு – சமூகம் | மனிதனும் அவன் ஆத்மாவும் |
| 3 | சமூக சிந்தனையில் வேற்றுமைகள்,முரன்பாடுகள் ஆகியவற்றிற்கு அழுத்தம் | அன்பிற்கும் சேவை மனத்திற்கும் மதிப்பு |
| | மனிதனை ஒன்றினைப்பது அவர்கள் சார்ந்த விருப்பு வெறுப்புகள் | இணைப்பது அவன் மனசாட்சி -ஆத்மா |
| 5 | உளவியலில் - பாலியல் போன்றவற்றிற்கு அழுத்தம் | மனிதன் தெய்வத்தின் ஒரு பொறி என்ற தத்துவம் |
| 6 | ஈகோவுக்கு அழுத்தம் | ஈகோவை தணித்தல் |
| 7 | நவீனத்திற்கு வெறியான ஆசை | பாரம்பரியத்திற்கு மதிப்பு |

1. அறிவியல் பார்வையில் மனிதன் ஒரு மிருகம் என்று இனம் காணப்பட்டுள்ளான். அந்த உயிரியல் சிந்தனையின் தாக்கத்தில் மனிதனின் அறிவு வளர்ந்து வருகிறது. மிகவும் முந்திய காலத்திலேயே, அதாவது இரண்டாம் நூற்றாண்டில், குலொடியஸ் கேலன் (Claudius Galen, 190 – 200 AD), என்ற பிரசித்தி பெற்ற உடல் அமைப்பியல்-தொழிலியல் நிபுணர், மனிதனின் முன்னங்கையைப் பற்றி அறிய விரும்பினார், ஆனால் அதற்காக அவர் கீறிப் படித்தது Barbary ape என்ற வாலில்லாத குரங்கின் முன்கையை. குலோடியஸ் கேலன் என்பவர் மருத்துவ உலகில் ஹிப்போகிரேற்றிஸுக்கு அடுத்ததாக பழம்பெரும் மருத்துவர் என்று போற்றப்படுபவர். அவர் தொடக்கிய மனிதன் - மிருகம் என்ற ஒற்றுமை, 19 ஆம் நூற்றாண்டில் சார்ல்ஸ் டார்வின் (Charles Darwin, 1802 – 82) ஏற்படுத்திய இனங்களின் தோற்றம், மனிதனின் பாரமபரியம், பரிமாணக் கொள்கைகளில் மிக நெருக்கம்

அடைந்தது. மனிதனைப் பற்றி அறிவதற்கு மிருகங்களின் உடலும் அதன் தொழிற்பாடும் மட்டும் அல்ல, மிருகங்களின் பழக்கவழக்கங்களும் ஆய்வுக்கு எடுத்து கொள்ளப்பட்டன. உடற் தொழிலியலில் பவ்லோவின நாய்கள், மிருக நடத்தையில் கொன்ராட் லொரென்ஸ் (Konrad Lorenz,) என்பவரின் பறவைகள், உளவியலில் B.F. ஸ்கின்னரின் (B.F. Skinner) எலிகள் மிகவும் பிரசித்தி பெற்றவை ஆகும்.

இவற்றைப் பற்றி 'The Ascent of man' என்ற தனது பிரசித்திபெற்ற நூலில் J.புரொனொவ்ஸ்கி (J Bronowski , 1908 – 74) எடுத்துக் காட்டிவிட்டு, கூறுகிறார். (8)

இவை மனிதனைப் பற்றி சிலவற்றைக் கூறுகின்றன. எல்லாவற்றையும் அவை கூற இயலாது. மனிதனில் ஏதோ ஒரு தனித்தன்மை உண்டு. அல்லாவிடில் வாத்துக்கள் தான் கொன்ராட் லொரன்ஸ் பற்றி விரிவுரை ஆற்றும். எலிகள்தான் B.F ஸ்கின்னர் பற்றி ஆய்வுரைகள் எழுதும்.

மேலும் மனிதனுக்கும் குதிரைக்கும் இடையே, உடல் அமைப்பில் பல ஒற்றுமைகள் இருந்தும், குதிரை மனிதன் மேல் சாவாரி செய்ய யோசிக்கவில்லை. மிகவும் நகைச்சுவையாக, புரொனொவ்ஸ்கி இதனைக் கூறியபோதும், அவர் மனிதனு டைய அறிவு, ஆற்றல், I.Q. இவற்றிற்குத் தான் முக்கியத்துவம் கொடுத்தது போல் தோன்றுகிறது. அவற்றிற்கு மேலாகவும் ஒன்று உண்டு. அது அவனுடைய ஆத்மா. அது தெய்வத்தின் குணம் உடையது. மனிதன் எதிர்காலத்தில் தன்னை அழிக்காமல் தொடர்ந்து வாழ வேண்டுமானால், இந்த சிந்தனை இளைஞரின் கல்வியில் சுவற வேண்டும் என்பது ஆத்மவியலாளர் வேண்டுதல் ஆகும்.

2. மனித வாழ்வின் அடிப்படை அலகு சமூகம் என்பது அறிவியல், அரசியல் நோக்காகும். சமூகவியலும் ஒரு குடும்பத்தையே அலகுவாகக் கருதுகின்றது. ஆனால் ஆத்மீக சிந்தனை, மனிதவாழ்வு ஆத்மாவிலிருந்தே ஊற்றெடுக்கின்றது என்கின்றது.
3. சமூகவியலாளர், தமது ஆய்வுகளில், சமூகத்திலுள்ள வகுப்பு வேற்றுமைகள், முரண்பாடுகள் எதிர்ப்புகள் ஆகியவற்றிற்கே அழுத்தம் கொடுத்துள்ளனர். உண்மையான கசப்புக்களைக் காட்டவேண்டிய அதே வேளையில், அதே சமூகத்தில் மண்டி உள்ள அன்புசால் ஒற்றுமை, சேவை மனப்பான்மை, பொறுப்புணர்வு ஆகியவற்றையும் அறிவுபூர்வமாக காட்டியிருந்தால், அவர்களின் ஆய்வுகள் வேற்றுமை முரண்பாடுகளுக்குப் பரிகாரமாக இருந்திருக்கும். போராட்டங் கள் குறைவதற்கு வாய்ப்பு தந்திருக்கும்.

M. Premachandran
SUB WARDEN
BALASINGHAM HALL
UNIVERSITY OF JAFFNA
JAFFNA



4. மனிதரை ஒன்றிணைப்பது அவர்கள் சார்ந்த விருப்பு வெறுப்புகளும் (vested interests) குழு உணர்வும் என்பது அறிவியல் ஆய்வுகளின் பார்வையாக இருந்தது. அல்ல, மனிதனை இணைப்பது அவனது மனசாட்சி, எல்லோருக்கும் பொதுவான ஆத்மாதான் என்பது ஆத்மீக சிந்தனை. – the atmic principle.
5. உளவியலில், உளவியல் - பகுப்பாய்வின் பிதாமகன் சிக்மன்ட் ஃபிராய்ட் (Sigmond Freud, 1956 – 1939) அவர்களின் கோட்பாடுகளுக்கு அளவுக்கு மீறிய ஆரவாரமும், அழுத்தமும் , அதிகமான வேளைகளில் தவறான விளக்கமும் பிரயோகமும் கொடுக்கப்பட்டு, பாலியல் (sexuality) போன்ற சிந்தனைகள் குழப்படிக்கு உள்ளாக்கப்பட்டுள்ளன. உளவியலின் உயரிய நோக்குகள், மனிதன் தெய்வத்தின் ஒரு பொறி என்ற ஆத்மீக தத்துவத்துடன் இணைந்தால், பாலியல் சிந்தனைகளின் சீரழிவுகளைத் தணிப்பது சுலபம் ஆகும்.
6. அதே போல ஈகோ, சுப்பர் ஈகோ (super ego) போன்றவற்றிற்கு நவீன சிந்தனை அழுத்தம் தருகின்றது. ஆத்மீக வளர்ச்சிக்கு ஈகோ எதிரியானதாகும்.
7. இன்றைய வாழ்வின் பலதரப்பட்ட தடுமாற்றங்களுக்கும் நடுவு நிலை பிறழ்வுகளுக்கும் காரணம், நிரந்தரமற்ற சில நவீன நடைமுறைகள் மேல், மக்கள் வைத்துள்ள வெறியான ஆசைகள் ஆகும். ஒரு நாட்டின் பாரம்பரியம் சரித்திர சோதனைகளுக்கு உட்படுத்தப்பட்டது. அதற்கு மலிவான மதிப்பு கொடுப்பது தன்னையே தாழ்த்துவது ஆகும். அப்போது மேம்பாடுகள் பாதிக்கப்படுகின்றன.

சத்திய சாயி பாபா கூறுகிறார் :

நவீன விஞ்ஞான சமூகவியல் கருத்துக்களை முற்றாக நிராகரிக்க முடியாது. மனித ஆத்மா சார்ந்த கருத்துக்களும் நவீன நடைமுறைகளும் ஒன்றிணைந்து, நல்வாழ்வுக்கு வேண்டிய வழிமுறையைக் காண்பதில் தான் எதிர்காலம் தங்கியுள்ளது.

அதற்காக, சத்திய சாயிபாபா ஐந்து மனித மேம்பாடுகளை, இனம் கண்டுள்ளார். இவை, நான் ஏற்கனவே குறிப்பிட்டது போல, மனித வாழ்வின் சகல நடத்தைகளிலும், நடவடிக்கைகளிலும் மிளிர வேண்டும்.

## சத்திய சாயி தரும் ஐந்து மனித மேம்பாடுகள

இந்த ஐந்து மனித மேம்பாடுகளின் ஆணிவேராக, ஆதார சுரிதியாக இருப்பது அன்பு என்ற மேம்பாடு ஆகும். மற்றவை சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை என்ப்படும்.

## அன்பு

அனைத்து மனித மேம்பாடுகளின் அன்னை அன்புதான். எல்லா மதங்களின் ஊற்றும் அன்பே. மதங்களையும், அவை சார்ந்த மனிதர்களையும் பிணைக்கக்கூடியது அன்பு ஒன்றே. அன்பின் மூலமே ஒருவரின் ஆத்மாவை அறிய முடியும். அன்பே கடவுள், இப்படியாக அறிஞர் கூறியுள்ளார்கள். ஆகவே மனித ஒழுக்கத்தின் அடிப்படையானது அன்பாகும். அன்பு இல்லாவிடில் மனிதன் உன்னத நிலையை அடைய முடியாது. மத நூல்கள், சமயப் பெரியாரின் ஞான மொழிகள் ஆகியவற்றிலிருந்து, அன்பு பற்றிய மேற்கோள்களை நான் இங்கே கூறுவதானால், எனது குறுகிய நேரப் பேச்சு அத்துடன் முடிந்துவிடும். ஆகவே வள்ளுவரிலிருந்து இரு குறள்களையும், இராமநாதன் பெரியாரின் அன்பு பற்றிய சில கருத்துக்களையும் மட்டுமே கூறவிரும்புகிறேன்.

*அன்புற்று அமர்ந்த வழக்குஎன்ப வையகத்து*
*இன்புற்றார் எய்தும் சிறப்பு.* (குறள் 75 )

திருவள்ளுவர் குறிப்பிடும் இன்பம், சிற்றின்பம் அல்ல. அது அகத்தின் ஆனந்தம், ஆத்மா அடையும் பேரின்பம் ஆகும். இனி,

*அன்பின் வழியது உயிர்நிலை அஃது இல்லார்க்கு*
*என்புதோல் போர்த்த உடம்பு* (குறள் 80 )

என்கிறார் வள்ளுவர்.

இந்த குறளிலும் உயிர் நிலை என்பது, வெறும் உயிர் கொண்ட நிலை அல்ல, அது உயர் நிலை ஆகும். வள்ளுவர் சிந்தனையில் உயிர் நிலை என்ற பதத்தின் உள்ளார்ந்த கருத்தை அறிவதற்கு சாயிபாபாவின் வார்த்தைகள் உதவுகின்றன. சாயிபாபா கூறுகிறார்:

மனிதன் சதையும் இரத்தமும் கொண்ட வெறும் பிராணி அல்ல. அவன் ஆத்மா உருவானவன். அந்த உண்மையை அவன் உணர்ந்தால்தான், ஆத்மீகம் அவனில் தெரியவரும்... உண்மையில் உன்னை உணரவும், உன்னில் உறைபவரை அறியவும்தான், உடல் உனக்குத் தரப்பட்டுள்ளது.


பெரியார் இராமநாதன் அன்பு என்ற மேம்பாட்டிற்கு ஆத்மீக அர்த்தமும் அந்தஸ்தும் தந்திருக்கிறார். அவர் கூறுகிறார்: [9]

- பூரணமான அன்பானது ஆத்மீக வளர்ச்சியைக் காட்டும். அந்த அன்பானது உருவமும் அழகும் அறியாதது, நண்பர், அயலவர், எதிரிகள் எவரிலும் வேற்றுமை காணாதது, எல்லோர் மேலும் சமமான அன்பு கொள்வது, தன்னை வெறுத்து கொடுமை

செய்பவர்களுக்கும் உதவி செய்வது. இத்தகைய முழுமை யான அன்பையே இந்திய ரிஷிகள் ஆத்ம புவனம் என்றார்கள்.

## அன்பில் விளையும் மற்ற நான்கு மனித மேம்பாடுகள்

அன்புடன் சார்ந்த மற்ற நான்கு மனித மேம்பாடுகளான சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை ஆகியவற்றை பின்வரும் படம் காட்டுகின்றது.




படம் : சத்திய சாயி தரும் ஐந்து மனித மேம்பாடுகள்

அன்பு வெறும் உணர்வு அல்ல, அது ஒரு தெய்வீக சக்தி. அன்பு எண்ணமாக உருவாகி, வாய்ச்சொல்லாக வரும்போது அது சத்தியம் எனப்படுகிறது. அன்பு வழிவந்த சத்தியத்தின் அடிப்படையிலே அவரது எந்தச் செயலும் தர்மம் என்ற மேம்பாட்டை அடையும். எண்ணத்திலும் சொல்லிலும் சத்தியம், செயலிலே தர்மம் என்ற ஒழுக்க வாழ்விலே ஒருவரின் உள்ளத்தில் சாந்தி நிலவும். இதற்கு மேலும் ஒரு மேம்பாடு நிலையை மனிதன் அடையலாம். அந்த நிலையில் மனிதன் தனது உயர் அறி மனத்தோடு, அதாவது தனது ஆத்மாவுடன் தொடர்பு கொள்கிறான். அந்த நிலையில் அவனது ஆத்மா சதா, எது நல்லது, எது தீயது என்று எடை போட்டபடியே இருக்கும். எந்த உயிருக்கும், எண்ணம் - சொல் - செயல் மூலம் தீங்கு விளைவிக்க விடாது. எல்லோரிலும் கடவுள் இருக்கிறார் என்று உணர்த்தியவாறு இருக்கும். இந்த உன்னத நிலை அகிம்சை என்ற மேம்பாட்டு நிலை ஆகும்.

## மனித உப மேம்பாடுகள்

அன்பு (பிரேமை), சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை என்ற ஐந்து மனித மேம்பாடுகளில், பல உப-மேம்பாடுகளை இனம் காணலாம். உப மேம்பாடுகளின் சில உதாரணங்கள் அனுபந்தம் 1 இல்

தரப்பட்டுள்ளன. நமது தினசரி வாழ்விலே நாம் எண்ணும் நல்ல சிந்தனைகள், கூறும் சத்தியமான வார்த்தைகள், நமது நன்னடத்தை, செய்யும் உதவிகள், சேவைகள் அனைத்தும் உப-மேம்பாடுகள் தாம். அவற்றை ஐந்து மேம்பாடுகளுடன், எதற்குச் சேர்த்தி என்று இனம் காணுவது தேவை ஆகும். மனித மேம்பாட்டுகளைப் பிள்ளைகளுக்குக் கற்பிக்கும் போது, ஓர் நடத்தையின் அல்லது செயலின் ஊற்றை விளக்குவதற்கு அது பெரிதும் உதவுகிறது. உதாரணமாக, தர்மம் போல் தோன்றும் ஒருவரின் செயற்பாடு, அன்பின் காரணமாக செய்யப்பட்டால்தான் அது தர்மம். அந்தக் காரியத்தின் மூல எண்ணம், தனக்கு ஏதாவது நன்மை, பெயர், புகழ், பட்டம், பதவி கருதியதாக இருந்தால், அது தர்மம் அல்ல, அதர்மம். சாயி பாபா கூறுவார் 'நீ செய்யும் செயலில் இருந்து நீ நல்லவனா கெட்டவனா என்று கூறுவது கடினம். நீ நல்லவனாக இருந்தால் நீ செய்வது நல்லதாகவே இருக்கும்.' அதாவது எந்தச் செயலும் அன்பு என்ற மேம்பாட்டின் விளைவாகவே இருக்க வேண்டும்.

## மனித உன்னதத்திற்கான கல்வி

தமது மக்கள் நல்லவராக இருக்க வேண்டும் என்று தான் எல்லா நாட்டினரும், எல்லா காலத்தினரும் விரும்புகின்றனர். தமக்கும், மற்றோருக்கும் , எதிர்காலச் சந்ததியனருக்கும் நல்வாழ்வு கருதிச் செயற்படுபவரே மனித உன்னத நிலையை அடைந்தவர்கள் என்று கருதலாம். அப்படியானவர்கள் தமது நாட்டின் கல்வி நிலை பற்றி மிகவும் விழிப்புடனும் விவேகத்துடனும் சிந்திப்பர். சென்ற இரு நூற்றாண்டுகளில் இந்திய உப கண்டத்திலும் நமது நாட்டிலும் இப்படியான பல பெரியார்கள் இருந்திருக்கின்றனர்.

19, 20 ஆம் நூற்றாண்டுகளில் வாழ்ந்த சில பெரியார்களின் பெயர்கள் அட்டவணை 3 இல் தரப்பட்டுள்ளன. இவர்களில் ராஜா ராம் மோகன் ராய் (1774 - 1833) அவர்களைத் தவிர மற்றவர்கள் இராமநாதன் வாழ்ந்த ஏதோ ஒரு காலப்பகுதியில் வாழ்ந்தவர்கள். ஆறுமுக நாவலர், இராமலிங்க சுவாமிகள், இராமகிருஷ்ணர் , ஷிர்டி சாயிபாபா ஆகியோர் இராமநாதனுக்கு முன்னம் பிறந்தவர்கள், மற்றவர்கள் அவருக்குப் பிந்திப் பிறந்தவர்கள்.

அவர்கள் அனைவருமே மனிதனின் ஒழுக்கத்திற்கும், அதற்கான கல்வி ஆத்மீகம் சார்ந்ததாக இருக்க வேண்டும் என்பதற்கும் அழுத்தம் கொடுத்தவர்கள். அத்துடன் பல தரப்பட்ட துறைகளில் ஈடுபட்ட அவர்கள், தமது உன்னத வாழ்வினாலும், ஆத்மீக சாதனையாலும், சாந்தி நிலவும் ஆழுமையினாலும் குரு என்று அழைப்பதற்கு உயர் தகுதி பெற்றவர்களாக இருந்தார்கள்.

**அட்டவணை 3**

இராமநாதன் காலத்தில் வாழ்ந்த சில ஆத்மீக கல்வியலாளர்

| | |
|---|---|
| ராஜா ராம் ராய் | 1774 – 1833 |
| ஆறுமுக நாவலர் | 1822 – 1879 |
| இராமலிங்க சுவாமிகள் | 1823 – 1874 |
| இராமகிருஷ்ணர் | 1836 – 1886 |
| ஷீர்டி சாயிபாபா | 1838 - 1918 |
| இராமநாதன் | 1851 – 1930 |
| இரவீந்திர நாத்தாகூர் | 1861 – 1941 |
| சுவாமி விவேகானந்தர் | 1863 – 1902 |
| மகாத்மா காந்தி | 1869 – 1948 |
| அரவிந்தர் | 1872 – 1950 |
| இரமண மகரிஷி | 1879 – 1950 |
| மகாகவி பாரதியார் | 1882 – 1921 |
| சுவாமி விபுலானந்தர் | 1892 – 1947 |

புத்துயிர் பெற்ற, நவீன இந்தியாவின் விடிவெள்ளி எனப் போற்றப்படும் ராஜா ராம் மோகன் ராய் உன்னதமான வாழ்வை வாழ்ந்து காட்டி, தேசிய வாழ்விலே தொட்டவை எல்லாம் பிரகாசிக்கச் செய்தவர்.[10] அவர் பழமையின் நலன்களையும் புதுமையின் நற்பாங்குகளையும் இணைந்ததோர் வாழ்க்கை முறையே ஏற்றது என எண்ணினார். முக்கியமாக, அவர் எல்லாச் சமயங்களும் ஒரே நோக்கைக் கொண்டவை என்பதிலும், அவற்றிற்கிடையே வேற்றுமை கற்பித்து வாதிட்டு வழக்குரைப்பது தவறு என்பதிலும் உறுதியாக இருந்தார்.[11]

இந்த அட்டவணையில் குறிப்பிடப்பட்ட பெரியார்களில், ராயைத் தவிர, வயதில் மூத்தவர் நமது நாட்டின் ஆறுமுக நாவலர் ஆவார். அவரும் ஒரு சிறந்த குரு என்ற வணக்கத்திற்கு ஏற்றவராக மக்களுக்கு சமயம் சார்ந்த நன்னடத்தை கற்பிப்பதில் வல்லுனராக இருந்தவர்.[12] அவர் எழுதிய பால பாடங்கள் பிள்ளைகளுக்கு அன்றாட வாழ்க்கையில் நல்ல ஒழுக்கத்தைப் புகட்டின. ஒளவையாருக்கு அடுத்ததாக ஒழுக்கம் நிலவிய சிறுவர் இலக்கியம் படைத்த எழுத்தாளராக நாவலரைக் கருத முடியும்.

இந்தியாவிலே நாவலருக்குச் சம காலத்திலே வாழ்ந்தவர் இராமலிங்க சுவாமிகள் என்னும் அருட்சோதி வள்ளலார் ஆவார். அவர் *ஒன்றே*

*குலமும் ஒருவனே தேவனும்* என்ற பொதுமையைக் கண்ட திருமூலர் வழியிலும், சமரசத்திற்குப் புத்துயிர் தந்த தாயுமானவர் வழியிலும் சமரச சன்மார்க்கத்தினை நிறுவினவர் என்று போற்றப்படுபவர்.[13] அவர் நிறுவிய சன்மார்க்க சங்கத்தின் முதன்மைக் குறிக்கோள்களுள், தெய்வம் ஒன்றே என்ற சிந்தனை, ஆன்மநேய ஒருமைப்பாடு, சமதர்ம சமுதாயம் காணல் புலால் உயிர்பலி மறுத்தல், சீவகாருண்ய ஒழுக்கம் ஆகிய மனித மேம்பாடுகள் சார்ந்த கோட்பாடுகள் அடங்கும். [14]

இராமகிருஷ்ணரும், ஷீரடி சாயி பாபாவும் இரண்டு ஆண்டுகள் வித்தியாசத்தில் பிறந்தவர்கள். இருவரின் வாழ்வின் அடிநாதமே, ஆத்மீகம் தான். இருவரும் தெய்வீகத்தின் வாழும் உருவங்களாக இருந்தார்கள். அவர்கள் எல்லா மதங்களையும் மதித்தவர்களாகவும் வாழ்ந்தார்கள். இருவரும், அவர்களுக்கு 18 நூற்றாண்டுகளுக்கு முன் வாழ்ந்த பகவான் யேசு கிறிஸ்து போல், சிறிய நீதிக் கதைகள் மூலம் அருமையான கருத்துக்களை வழங்கியவர்கள். இராமகிருஷ்ணருக்கு மிகவும் உன்னதமான சிஷ்யராக விவேகானந்தர் கிடைத்ததால், அவரது சிந்தனைகள் உலகளாவிய ரீதியில் பரவியன. ஷீரடி சாயி பாபாவுக்கு அத்தகைய பிரகாசமான சிஷ்யர் இருக்கவில்லை. ஆனால், அவர் மகா சமாதி அடைந்து எட்டு ஆண்டுகளின் பின் அவரின் அவதாரமாகத் தோன்றிய சத்திய சாயி பாபா, இன்றைய உலகம் வியக்கும் விதத்தில் வகையிலும், வியாபகத்திலும் சர்வ மத சமரச நிலையிலே ஆத்மீகத்திற்கு சரியான அர்த்தமாக உன்னத வாழ்வு, உன்னத கல்வி, உன்னத சேவை என்றவாறு மனித உன்னத வாழ்விற்கு வழி காட்டுவது நாம் அறிந்ததே. அவரின் கல்வி சார் கொள்கை, செயல்திட்டம் பற்றி சுருக்கமாக பின்னால் பார்ப்போம்.

சுவாமி விவேகானந்தர் 19ஆம் நூற்றாண்டின் பிற்பகுதியில் 39 ஆண்டுகளே வாழ்ந்தவர். விவேகானந்தர் பிறக்கும் போது இராமநாதன் அவர்களுக்கு 12 வயது, இறக்கும் போது 51 வயது. இராமநாதன் அவர்களின் சமயம் கல்வி சம்பந்த பேச்சுக்களைப் படிப்பவர்கள், அவற்றில் விவேகானந்தரின் கருத்துக்களுடன் இருக்கும் ஒற்றுமையை அவதானிக்க முடியும். விவேகானந்தர் மனித உன்னத ஆளுமைக்கு உதாரணமாக திகழ்ந்தவர். மனித உன்னதம் (Human excellence) என்ற பதம் விவேகானந்தரால் கையாளப்பட்டு, அவரது சொற்பொழிவுகளில் ஊடுருவிச் செல்வதை உணர முடியும் [15]

விவேகானந்தர் கேட்கும் ஒரு அடிப்படைக் கேள்வி ஒன்று உண்டு, அதாவது *'நீ ஒரு மனிதனா?'* என்பதாகும். திரும்பத் திரும்ப இதனைக் கேட்பார் விவேகானந்தர். 'நீ எந்த மதத்தைச் சேர்ந்தவன் என்பது பற்றி எனக்குக் கவலை இல்லை. நீ எந்த சாதிக்கோ, சமூகத்திற்கோ, நாட்டிற்கோ சேர்ந்தனவாக இருப்பது பற்றியும் நான் அறிய விரும்பவில்லை. ஆனால் நீ ஒரு மனிதனா என்பதைத் தான் அறிய விரும்புகிறேன்' என்பார் அவர். இந்தக் கேள்விதான்

விவேகானந்தரின் கல்விக் கொள்கையாக இருந்தது. விவேகானந்தர் வேண்டியது *மனிதனை உருவாக்கும் கல்வி. Man making education.*[15]

சத்திய சாயிபாபாவின் பேச்சுக்களை கேட்பவர்கள் அல்லது படித்தவர்கள், இதே கூற்றுக்களும் கேள்விகளும், அவரின் பேச்சுக்களில் ஒலிப்பதை அறிவார்கள். சாயி சொல்லுவார், எம்மைச் சொல்லும்படி சொல்லுவார்.: *'I am a man, not an animal நான் மனிதன், மிருகம் அல்ல'* என்று .

மனிதனை மிருகமாகப் பாவித்த உயிரியல் சமூகவியல் கோட்பாடுகளினால், மனித மேம்பாடுகளுக்கு ஏற்படக்கூடிய விபத்துக்கள் . விபரீதங்கள் பற்றி ஏற்கனவே பார்த்தோம்.

ஆகவே இதற்கு நிவர்த்தியான கல்வியல் சிந்தனையும் வழி முறைகளும் பல அறிஞர்களால் முன்வைக்கப்பட்டன. மனிதன் தனது சத்தியத்தையும் தர்மத்தையும் முழுமையாக உணர்ந்து, சாந்தியுடன் வாழவேண்டும் என்ற சிந்தனை அதுவாகும். தாகூரின் சாந்திநிகேதம், அந்தக் குறிக்கோளுடன் 1901இல் தாபிக்கப்பட்டது. அந்தக் காலத்து பாடசாலைக் கல்வியானது, பிள்ளையுடைய புத்தி, உடல், ஆத்மீக வாழ்வுக்கிடையே ஆழ்ந்த பிளவை உண்டுபண்ணுவதாக தாகூர் கருதினார். நாம் வாழும் உலகிலிருந்து பிரிக்கப்படாத ஒரு ஆத்மீக உலகிலேயே எனக்கு நம்பிக்கை உண்டு என்றார் தாகூர்.[16]

ஆன்மீக கல்விச் சிந்தனையாளர் வரிசையிலே மிகவும் போற்றப்படுபவர் அரவிந்தர் என்று நாம் அழைக்கும் Sri Aurobindo ஆவார். கல்வியானது முழுமை அடைய வேண்டுமானால், அது மனிதனின் உடல், உயிர், உளம், புத்தி, ஆத்மா என்ற ஐந்தும் சார்ந்ததாக ஒன்றிணைந்து இருக்க வேண்டும் என்று கூறினார். - இதை *ஒன்றிணைந்த கல்வி* என்றார் அவர். -Integral education [17]. அத்துடன் பல்கலைக்கழகங்கள் மனித நேயத்தினை உருவாக்குவதிலும் கூடிய கவனம் செலுத்துவது முக்கியமாகும் என்றும், மனித நேயமே மனித குலத்தின் தத்துவமாக விளங்குதல் வேண்டும் என்றும் கூறினார்.[18]

அரவிந்தருடைய நல்ல நண்பர்களில் ஒருவர் மகாகவி பாரதியார். பாரதியார் கவிதை உருவிலே தமிழ் மக்களுக்குக் கிடைத்த ஆத்மீகச் செல்வம். அவர் தெய்வ பக்திக்கு முன்னிடம் கொடுத்த முற்போக்குக் கவிஞர். ஆத்மீக சக்தியின் அழுத்தத்தை அவரது தோத்திரப்பாடல்களில் மட்டும் அல்ல, பாப்பா பாட்டு தொடக்கம் அநேக கவிதைகளில் காண முடியும்.

தமிழ் நாட்டிலே வாழ்ந்து 50 வருடங்களுக்கு முன்பே மறைந்தவர் இரமணமகரிஷி. அவரும் ஆன்ம சக்தி நிறைந்தவர். அவர் முன்னிலையிலே அடியார்களது அகஇருள் அகன்றுவிடுவது ஒரு அன்பான அனுபவம் என்று கூறுவார்கள். அவர், ஒருவர் துக்கமின்றி சுகமாக இருப்பதற்கு *'நான் யார்?'* என்ற ஞான விசாரமே முக்கிய சாதனம் என்று உபதேசித்தவர். [19]

ஏறத்தாழ இரமண மகரிஷியின் காலத்தில் வாழ்ந்த அரசியல்வாதி, மோகனதாஸ் காந்தி, மகாத்மா என்று போற்றப்படுவது அவரது அரசியல் சாணக்கியத்திலோ, கல்வியின் மேதாவிலாசத்தினாலோ அல்ல. வெற்றியிலும் தோல்வியிலும் சத்தியத்தைக் கடைப்பிடித்த ஒருவர் என்பதால்தான், அவர் மகாத்மா ஆனார். அரவிந்தர் போல், அரசியல் என்ற துறையிலும், ஆத்மீகத்தின் அனுசரனை இருந்தால்தான் அரசியலில் தர்மம் இருக்கும் என்று காட்டியவர் மாகாத்மா காந்தி.

நான் இதுவரை கூறிய உன்னதமானவர்களில், இராமநாதனின் காலத்தில் இளைஞராக இருந்தவர் சுவாமி விபுலானந்தர். ஸ்ரீ ராமகிருஷ்ண சங்கத் திரு மடத்தைச் சேர்ந்த விபுலானந்தர், பல கல்வி நிறுவனங்கள் ஆச்சிரமங்கள் ஆகியவற்றைத் தோற்றுவித்து மாணவர்களிடையே ஒழுக்க வாழ்வை வற்புறுத்தினார். இலங்கைப் பல்கலைக்கழகத்தின் முதலாவது தமிழ் பேராசிரியராக, ஒரு ஆத்மவியலாளர், ஒரு உன்னதச் செல்வர் இருந்தது, நமக்கு இறைவன் தந்த ஆசிர்வாதம் ஆகும். சுவாமி விபுலானந்தரின் ஞாபகத்திற்கு எமது பல்கலைக்கழகம் தகுந்த உகந்த மரியாதை கொடுக்கவேண்டும்.

## கல்வியின் இன்றைய நிலையும் தேவைகளும்

மனித மேம்பாடுகள், மனித உன்னதநிலை ஆகியவற்றைப் பொறுத்தவரை, உலக நாடுகள் அனைத்திலும், இன்றைய கல்வியின் நிலை பயங்கரமானதாகும். இந்திய உபகண்டத்திலும், இலங்கையிலும் கல்வியியலாளர் கொண்ட குழுக்கள் , தெரிவித்த கருத்துக்கள் சிலவற்றை மட்டுமே இங்கே குறிப்பிடுகிறேன். இலங்கையில் 1997 இல் வெளியிடப்பட்ட பொதுக் கல்விச் சீர்திருத்த அறிக்கை பின்வருமாறு கூறியுள்ளது [21] 'எமது கல்வித் திட்டமானது, சமூக மனப்பான்மையும், பன்மை மக்கள் கொண்ட ஒரு சமூகத்திலே மனிதன் வாழ்வதற்குரிய மேம்பாடுகளையும் உக்குவிக்கத் தவறிவிட்டது. அவர்கள் (மாணவர்கள்) கூட்டுணர்வுடன், முரண்பாடுகளைத் தவிர்க்கவும் சுமூகமாகத் தீர்க்கவும் தகுதி பெற வேண்டும்.' (பக். ii) அதற்கு மேம்பாட்டுக் கல்விக் கருத்துகள் பாடசாலையின் எல்லா நடவடிக்கைளிலும் இணைக்கப்பட வேண்டும். பாடசாலை திட்டங்களை வகுக்கும்போது அதற்கு அதி முக்கிய கவனம் செலுத்த வேண்டும். (பக் .-17-18)

இந்தியாவிலே 1948 – 49 களில் டாக்டர் எஸ் . ராதாகிருஷ்ணா தலைமையிலான பல்கலைக்கழகக் கல்விக் குழு [22], பல்கலைக்கழக நிலையிலேயே, அதன் பாடத்திட்டத்தில் மதம், நல்லொழுக்கம் சார்ந்த கல்வியை வற்புறுத்தியது. அதிலே வரும் பின்வரும் வசனம் கவனத்திற்கு உரியதாகும்.

> *'ஒருவர் பெற்றுக்கொள்ளும் அறிவுசார் செய்திகள் எவ்வளவாகினும்,*
> *அவரை கல்விமானாகவோ, பண்புடையவராகவோ மாற்ற இயலாது.*
> *அதற்கு அவரில் ஏதோ விழிப்படைய வேண்டும், அதாவது ஆன்ம வாழ்வை வாழும் தகைமையை இயற்கையாகவே அவர் அடைய வேண்டும்.'*

அதே போல் 1952 தொடக்கம் 1986 வரை ஐந்து கல்விச் சிபார்சுக் குழுக்களும், [22] தமது அறிக்கையில் ஒழுக்கம், நற்பண்புகள், சர்வமத புரிந்துணர்வு, ஆத்மீகம் சார்ந்த கல்வி ஆகியன உடனடியாகக் கற்பிக்க வேண்டிய தேவையைக் காட்டியுள்ளன.

## தவறு எங்கே உள்ளது ?

ஆதி தொடக்கம் அறிவியலாளர் இதனையே கூறி வந்துள்ளனர். கிரேக்க தத்துவஞானிகளும், ஹீப்ரு தீர்க்கதரிசிகளும் இதனையே கூறினார். வியாசரும், சொராஸ்றரும், மகாவீரரும், புத்தரும், யேசுவும் வள்ளுவரும் ஒழுக்க அறிவுரைகளையா இப்போது நாம் பேசுகின்றோம்? அண்மையில், வாழ்ந்து நெஞ்சில் நிற்கும் பெரியார்களைப் பற்றி சற்றுமுன் சுருக்கமாக கூறினேன். அப்படி இருந்தும் 21லும் நூற்றாண்டின் ஆரம்பத்தில், வாழும் எல்லா மக்களின் எதிர்காலம் குறித்து ஏன் நாம் பீதி கொள்கிறோம்?.

அதற்கு சில முக்கிய காரணங்கள் உண்டு.

1. அந்த மகான்களின் சீரிய சிந்தனை, கல்வி ரூபத்திலே அடி மட்டத்தில் மக்களிடையே சரியான முறையில் சுவறவில்லை.
2. கடந்த இரு நூற்றாண்டுகளில், முக்கியமாக மறைந்த நூற்றாண்டில், விஞ்ஞானம், யந்திர தொழில்நுட்பவியல் ஆகியன உலகில் ஏற்படுத்திய மாற்றங்களின் வேகமும், உத்வேகமும், சமூக அமைப்புக்களை நிலைகுலையச் செய்துவிட்டன, எமது மேம்பாடுகளை ஒதுக்கியும் விலக்கியும் வைத்து விட்டன, எமது பாரம்பரியத்தின் வேர்களை கருக வைத்துவிட்டன. இதனால் மனிதன் ஒரு அதிர்ச்சி நிலையில் இருக்கிறான். அல்விக் றொ.ஃ.ப்லர் (Alwin Tofler) கூறுகிறார். அவர் இந்த நிலைமைகளை Future shock என்ற 500 பக்க நூலில் விவரித்துள்ளார்.

இந்த அதி தீவிர மாற்றங்கள் தனி மனித, சமூக, உளவியல் பாதிப்புகளை உண்டாக்கிவிட்டன. நிரந்தர அமைப்புகள் உடைந்து எல்லாம் தற்காலிகம் ஆகிவிட்டன. நவீன நாடோடிகள் அதிகரித்து நாட்டுக்கு நாடு அலைகிறார்கள். (இவர்களில் யாழ்ப்பாணத் தமிழர் நல்ல உதாரணங்களாவர்.) அல்வின் றொ.'.ப்லர் கூறுகிறார், விஞ்ஞானத்தின் ஆதிக்கத்தின் பின் சமூகம் மாற்றம் அடையவில்லை, ஒரு புதிய சமூகமே தோன்றிவிட்டது, [23] (பக்.185 ). அந்த அதி-இயந்திர தொழில்நுட்பவியல் உலகிலே நாம் திடீர் ஆபத்தான நிலையில் வாழ்கின்றோம். (பக்.186 ). எமது மிக முக்கியமான கல்விமுறை பயங்கரமான முறையில் பழுதடைந்துவிட்டது. [23]

விஞ்ஞானம் நடாத்திய பௌதீக அணுவின் உடைப்புப்போல், உயிரியல் அணுவின், அதாவது கலத்தின் உடைப்பும் புரட்டும் எம்மை எங்கே விழுத்தும் என்ற பீதி எல்லோர் மனத்திலும் உண்டு. குளோனிங் போன்ற விஞ்ஞான விளையாட்டுகள் விபரீத வினையில் முடியலாம். இங்கேயும் மனிதனை செம்மறிபோல் பாவித்து டொலி ஆக்கும் கேலிக் கூத்தின் துன்பியலை நாம் அனுபவிக்கக் கூடும்.

3. மனித மனதைச் சாந்தப்படுத்த வேண்டிய மதம் தனது ஆன்மீகத்தை மறந்துவிட்டது. அது அரசியல் ஆதிக்கம், ஆரவாரமான ஆராதனைகள் ஆகியவற்றில் அதிக அக்கறை கொண்டுள்ளது. ஐன்ஸ்றைன் கூறினார்.

*விஞ்ஞானம் இல்லாத சமயம் - குருடு*
*சமயம் இல்லாத விஞ்ஞானம் -முடம் .*

உலக மக்கள் இப்போது இது இரண்டாகவும் இருக்கிறார்கள் - குருடும் முடமும். அத்துடன் நல்லவர்கள் ஊமைகளாகவும் இருப்பதுதான், நாம் அனுபவிக்கும் அவலங்களுக்குக் காரணம்.

சமீபத்தில் உதயன் பத்திரிகையில் வெளிவந்த செய்திகளில், பாக்கிஸ்தான் நாட்டின் அணுசக்தி விஞ்ஞானி அப்துல் காதர் கான், 'இந்தியாவிலுள்ள நகரங்களை சில நிமிடங்களில் அழிப்போம், அதற்கு அணுகுண்டு ஏவுகணைகள் தயார் நிலையில் உள்ளன' [24] என்று எச்சரிக்கை செய்ததைப் படித்திருப்பீர்கள்.

இந்தச் செய்தியை நாம் படிக்கும் போது மத அரக்கனும், விஞ்ஞான விசரனும் கைகோத்து ஊழித்தாண்டவம் ஆடும் காட்சி கண்களில் தோன்றுகின்றது.

இத்தகைய அட்டூழிய சிந்தனை பாக்கிஸ்தானுக்கு மட்டும் தனியுடமை அல்ல. ஒரு நாடும், ஒரு மதமும் இதற்கு விதிவிலக்கல்ல. 1945 ஆம் வருடம் ஓகஸ்ட் மாதம், அணுகுண்டு போட்டு ஹிரோஷிமா, நாகசாக்கி நகரங்களையும் அதன் மக்களையும் அழித்தது பாக்கிஸ்தான் அல்ல, அமெரிக்கா. ஹிரோஷிமாவில் 343,000 மக்களில் 136,989 பேர் உயிரிழந்தார்கள். நாகசாக்கியில் 212,000 மக்களில் 73,884 பேர் உயிரிழந்தார்கள், 76,796 பேர் ஊனமானவர்கள்.

இதனால், ஒரு மதத்தையோ, மதஸ்தாபகரையோ குறை கூறமுடியாது. வெவ்வேறு மதங்களைப் பின்பற்றுபவர்கள் கடைப்பிடிக்கும் அதீத சமயப் போக்கினால் (Religious Fundamentalism) உந்தப்படும் விபரீத விளைவுகள் தாம் இவையாகும். ஏமது பல்கலைக்கழகத்தின் கிறிஸ்தவ, இஸ்லாமிய நாகரீகத்துறையின் முன்னைநாள் தலைவர், அருட்திரு சந்திரகாசன் அவர்கள், பல நாடுகளிலே தலை தூக்கிவரும் வன்முறைகள் சமய வாழ்வோடு இணையாத போக்கினால் சீரழிந்த ஒரு பண்பாட்டின் பரிதாபத்தைச் சுட்டி காட்டுகின்றதோ, என்ற எண்ணத்தை முன்வைக்கின்றார். புத்த சமயத்தைச் சார்ந்த பெரும்பாலானோர் வாழும் நமது இலங்கையையும் அவர் உதாரணமாகக் காட்டுகிறார். (26)

ஆறுமுக நாவலர் பற்றி நாம் பேசும் போது, புத்த சமயத்திற்கு புத்துயிர் தந்த டேவிட் ஹேவாவித்தாரண என்ற அநாகரிக்க தர்மபபலாவை குறிப்பிடாமல் இருக்கமுடியாது. அவர் மகாபோதி சங்கத்தின் ஸ்தாபகர். இவ்வருடம் Oxford University Press வெளியிட்ட Gurus and their followers என்று நூலில் லெய்டன் பல்கலைக்கழகத்தின் பேராசிரியை கார்லா ரிசியூ (Carla Risseuw) என்பவர் தர்மபாலா பற்றி பின்வருமாறு எழுதுகிறார். பிரசித்தி பெற்ற தேசாபிமானி, தர்மபாலாவின் பிரதான எழுத்துக்களைப் பார்க்கும் போது, எப்படி இலங்கையின் தேசியம் மிகவும் உறுதியான தமிழர் - எதிர்ப்பு பார்வைகள் கொண்டுள்ளதாக இருந்தது என்பது புலனாகும், இந்த மனப்பான்மை இப்போதும் சில வட்டாரங்களில் உயிருடன் இருக்கின்றது. (27)

பிறநாட்டின் பேராசிரியை கார்லா ரிசியூ காட்டும் இந்தப் பாதகத்தை தமிழ் மக்கள் 1948 இன் பின் படிப்படியான அகோரத்துடன் அனுபவிக்கிறார்கள். ஒரு மதத்தின் அழுத்தம் இனத்துவேஷமாக மாறி மதத்தின் பெயரில் ஆதிக்கம் செய்வதைப் பார்க்கின்றோம். அதற்கு பௌத்த குருமாரே தலைமை வகிக்கின்றனர். அரசியல்வாதிகளே இனப்பிரச்சனைக்குக் கொண்டுவரும், மிகவும் குறைந்த அளவிலான அரசியல் தீர்வையே அவர்கள் எதிர்க்கின்றனர். ‘சிறுபான்மையினரின் அபிலாசைகளுக்குச் சிறிதளவும் மதிப்பளிக்காத பௌத்த மகா சங்கத்தினரின் மனப்போக்கு நாட்டைப் பேரழிவுக்கே இட்டுச் செல்லப் போகிறது என்றும், அரசியல்வாதிகளும் பௌத்த மகாசங்கத்தினரும்

தங்கள் சிந்தனைகள் -மனங்களைத் திருத்திக் கொண்டால் மட்டுமே சமாதானக்கதவுகள் திறக்கும் ' என்றும் சமீபத்தில் இந்து சாதனம் பத்திரிகை கூறியுள்ளது. [28] ' இந்து சாதனம் இதழின் ஆசிரியர் ஒரு பௌதிகவியல் விஞ்ஞானி, எமது பல்கலைக்கழகத்தின் பேராசிரியர் என்பது குறிப்பிட வேண்டியது ஒன்றாகும்.

அவர் கூறிய 'பேரழிவு' அதைத் தவிர்க்கக் கூடிய 'மனத்திருத்தம்' ஆகியவற்றை இந்த நாட்டில் வாழும் சகல மக்களும், இன மத பேதமின்றி, கருத்தில் கொண்டு துரிதமாக செயற்படுவது இன்றியமையாததாகும்.

## கற்பிப்பதில் ஒரு புதிய அணுகுமுறை

### சத்திய சாயி பாபாவின் மனித மேம்பாட்டுக் கல்வி முறை

கல்வியின் முடிவான பயன் நல்லொழுக்கம் என்பது சத்திய சாயிபாபாவின் கருத்து ஆகும். – The end of education is character. சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வியின் நோக்கம் பிள்ளைகள் மனித உன்னதத்தை அடையச் செய்வதே.

இதுவரை காலமும் கல்வியியலாளர் பயன்படுத்திய குழந்தை உளவியல், கல்வி உளவியல், கற்பிக்கும் நுட்பவியல் ஆகியவற்றைத் தகுந்தவாறு உபயோகிக்கும் அதே வேளையில், இக் கல்வியானது பிள்ளையின் ஆத்மாவிற்கும், அதில் ஊறும் ஆன்மீகத்திற்கும் பக்குவமாக மதிப்பு கொடுக்கின்றது. Sathya Sai Education on Human Values is based on spirituality.
ஆரம்பத்தில் சத்திய சாயியின் பக்தர்களின் பிள்ளைகளுக்கு 'பாலவிகாஸ்' வகுப்புகள் என்று நடாத்தப்பட்ட இந்த ஒழுக்கக் கல்வி, இப்போது மனித மேம்பாட்டுக் கல்வி என்று பாடசாலைகளில் உள்ள எல்லாப் பிள்ளைகளுக்கும் அறிமுகப்படுத்தப்படுகின்றது.

இந்தக் கல்விமுறையின் முக்கிய அம்சங்களை சுருக்கமாகத் தருகின்றேன்.

- ஏற்கனவே கூறப்பட்ட ஐந்து மனித மேம்பாடுகளான அன்பு, சத்தியம், தர்மம், சாந்தி, அகிம்சை ஆகியவற்றின் அடிப்படையிலேயே இக்கல்வி அமைந்துள்ளது. [29, 30]
- இந்தக் கல்வி எந்த மதத்தையும் சார்ந்தது அல்ல. ஆனால் எல்லா மதங்களிலும் உள்ள ஆன்மீக, மனித நேய உண்மைகளும், மத ஸ்தாபகர்களின் அறிவுரைகளும் பயன்படுத்தப்படும்.

M. Dramachandran
SUB WARDEN
BALASINGHAM HALL
UNIVERSITY OF JAFFNA
JAFFNA



- ஒரு மதத்திற்கும் நாட்டின் கலாச்சாரத்திற்கும், நம்பிக்கைகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் இடையூறாக இந்தக் கல்வித் திட்டம் இருக்காது.
- சத்திய சாயியின் வாழ்க்கை, சத்திய சாயி சேவா நிறுவன நடவடிக்கைகள் ஒன்றும் இதில் அறிமுகப்படுத்தப்படுவது இல்லை. கல்வி முறையின் பெயர் மட்டும் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி என்று அழைக்கப்படும். – Sathya Sai Education for Human Values (SSEHV).
- பாடசாலைகளில் இந்தக் கல்விமுறை உபயோகிக்கும் போது

- புதிய பாடநூல்களைச் சேர்க்காது அவர்கள் படிக்கும் நூல்களை வைத்தே ஐந்து மேம்பாடுகளும், உபமேம்பாடுகளும் பிள்ளைகள் மனதில் பதிய வைக்கும்.
- பாடசாலை பாடவிதானத்தில் குறுக்கிட்டு எவ்வித மாற்றமும் ஏற்படுத்தாது.
- பாடசாலையின் எல்லாப் பாடங்களுடனும், விளையாட்டுக் களுடனும் ஒன்றிணைக்கப்படும்.[31,32] அதற்கென்று தனியாக வகுப்போ, நேரமோ தேவை இல்லை.
- இப்போது இருக்கும் சமய வகுப்புகளில் மாற்றம் இருக்காது. பிள்ளைகள் தமது சமயங்களை நன்கு தெரிந்து இருக்க வேண்டும் என்பது சாயியின் கொள்கை ஆகும்.

இவ்வேளையில், சாயிபாபா தன்னிடம் வருபவர்களுக்கு கூறும் அறிவுரை ஒன்றைக் கூறுவது பொருத்தம் என நம்புகிறேன் . சாயி கூறுவார் :

*என்னிடம் ஒரு இந்துவாக வாருங்கள்*
*திரும்பிப்போகும் போது மிக நல்ல இந்துவாக போங்கள்*
*என்னிடம் ஒரு கிறிஸ்துவராக வாருங்கள்*
*திரும்பும் போது நல்ல கிறிஸ்தவராக போங்கள்*
*Come to me as a Muslim*
*Go as a better Muslim*

- இக்கல்வி முறை ஆசிரியரின் ஒழுக்கத்திற்கு முன்னுரிமை கொடுக்கின்றது. ஆசிரியர் ஒரு முன் மாதிரியாக இருப்பது மட்டுமல்ல, அவரிடமிருந்து அன்பு பரவ வேண்டும் என்று வலியுறுத்துகிறது. a teacher should not only be an example, but also radiate love.

- இக் கல்வியின் வெற்றிக்கு பெற்றோரின் ஒத்துழைப்பு மிகவும் அவசியமாகும்.[33]

**சத்தியசாயி மனித மேம்பாட்டுக் கல்வி கற்பிக்கும் முறைகள்** [34]

பிள்ளையின் உடல், உளம், ஆத்மா இசைவுபெறும்படியாக அமைந்த ஐந்து கற்பிக்கும் முறைகள் பின்வருமாறு:

- அமைதியாக இருத்தல்
- பிரார்த்தனையும், பெரியோரின் அறிவுரைகளையும் படித்தலும்
- கதை கூறலும், சான்றோர் வாழ்க்கையைப் படித்தலும்
- குழுப் பாடல்
- குழு முயற்சி

இவற்றினால் வரக்கூடிய நன்மைகளைக் கூறுவதற்கு நேரம் இன்மையால், பொதுவாக நாம் எதிர்பார்க்கும் பலாபலன்களை குறிப்பிடுகின்றேன்.

- ஒருவர் தனது சூழலுடனும் மனிதருடனும் இசைவாகவும் *சாந்தி*யுடனும் வாழப் பழக வேண்டும்.
- எல்லா உயிர்களையும் மதித்துப் பேண வேண்டும்.
- தனது உணர்வுகளையும் ஆசைகளையும் கட்டுப்படுத்தும் ஆற்றல் பெறவேண்டும்.
- சிந்தனை, சொல், செயல் ஆகியவை நல்லதாகவும் ஒன்றிணைந்ததாகவும் இருக்கும் உன்னதம் பெறவேண்டும்.
- தனது சமூகத்திற்கு ***அன்பின்*** அடிப்படையில் தன்னலம் கருதாத சேவை செய்யும் மனப்பான்மை பெறவேண்டும். இதுதான் *தர்மம்* என உணர வேண்டும்.

சிறார்களுக்கு ஏற்ற அமைதி இருத்தல் என்ற முறை (silent sitting), பெரிய மாணவருக்கும் தியானம் ஆக பயிற்சிக்கப்படும். எல்லா மதங்களும் ஏற்கக்கூடிய ஜோதி தியானம் என்ற முறையே கையாளப்படுகிறது. தன்னை உணர்ந்து கொள்வதற்கும், தன்னை ஆளுவதற்கும் தியானம் ஒரு சிறந்த முறையாகும்.

இராமநாதன் ஐயா அவர்கள் தினமும் தனது நாளைத் தியானத்துடனே ஆரம்பிப்பார். அவர் அதை தனது மிக முக்கிய அடிப்படை

நடவடிக்கையாகக் கருதினார். ஆதிகால ரிஷிகள் போல் பல மணிநேரம் தியானத்தில் இருப்பார்[35] என்று வைத்திலிங்கம் கூறுகிறார்.

அதேபோல் இராமநாதன் பிரார்த்தனையின் சக்தியில் பெரும் நம்பிக்கை உள்ளவர். அவர் உதடுகளில் எப்போதும் பிரார்த்தனை இருக்கும். பரமேஸ்வரனை வேண்டும் அந்தப் பிரார்த்தனை *திரிகரண சுத்தியும் காரிய சித்தியும் அருள்வாய்* என்பதை அவர் பரமேஸ்வரா கல்லூரியின் தலையாய வாசகமாக வைத்ததை ஞாபகமூட்ட விரும்புகிறேன்.[36]

சத்திய சாயி கற்பிக்கும் முறையில் எல்லா மதங்களிலும் உள்ள நல்ல பிரார்த்தனைகள், பெரியோர் வாக்குகள், கதைகள், பாடல்கள் எல்லாப் பிள்ளைகளுக்கும் கூறி விளக்கப்படுகின்றன. இதனால் மதங்களுக்கு இடையே உள்ள ஆன்மீக ஒற்றுமையைப் பிள்ளைகள் உணரக் கூடியவர்களாக இருப்பர்.

சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி முறை உலகின் பல நாடுகளில் ஏற்கப்பட்டுள்ளன. சில நாடுகளில் அதற்கு அரச அங்கீகாரம் உண்டு. இந்தியா, தாய்லாந்து, சம்பியா, நேப்பால் ஆகிய நாடுகளில் அதற்கென சத்திய சாயி பாடசாலைகள் உண்டு. இலங்கையில் சிங்களத்தில் கற்பிப்பதறகான சாயி மனித மேம்பாட்டுக் கல்வி பாடசாலை ஆரம்ப நிலையில் உள்ளது. தமிழ் மொழியில் இதைக் கற்பிப்பதற்கு எமது அணுகுமுறையை வேறு விதத்தில் அமைத்துள்ளோம். எமது முறையும் செயற்பாடும் பலரின் பாராட்டுக்களைப் பெற்றதாகும்.

## இலங்கையில் பாடசாலைகளில் மனித மேம்பாடுகள் கல்வி அறிமுகம்

1998 இல் வட கிழக்கு கல்வி அமைச்சின் அங்கீகாரத்துடனும், சமபந்தப்பட்ட வட்டாரக் கல்வி பணிப்பாளரின் அங்கிகாரம், அனுசரணை ஆகியவற்றுடனும், இந்தக் கல்வி முறை யாழ். குடாநாடு, வவுனியா, மட்டக்களப்பு, திருகோணமலை, ஹற்றன் ஆகிய இடங்களில் அறிமுகப்படுத்தப்பட்டது.

ஆண்டு ஒன்று கற்பிக்கும் ஆசிரியர்களுக்கு 2 நாள் பட்டறைப் பயிற்சி அளிக்கப்பட்டது. ஒரு பட்டறையில் ஆகக் கூடியதாக 35 ஆசரியர்களே இருந்தனர்.

யாழ் குடாநாட்டில், 1998 இல் நாம் நடாத்திய பட்டறையின் பாடசாலை, ஆசிரியர் எண்ணிக்கை அனுபந்தம் 2 இல் தரப்பட்டுள்ளது. பட்டறைகள் 12 இடங்களில் நடாத்தப்பட்டது.

அந்த ஆண்டில் யாழ். குடா நாட்டில் உள்ள 445 பாடசாலைகளில் 316 பாடசாலைகளிலிருந்து ஆண்டு ஒன்றின் ஆசிரியர்கள் பங்குபற்றினார்கள். அதாவது 71 சதவிகிதம். எல்லாமாக 397 ஆசிரியர்கள் பயிற்றப்பட்டனர். இந்த ஆசிரியர்கள் படிப்பிக்கும் பிள்ளைகள் ஏறத்தாழ 9600 ஆகும்.

வவுனியா, திருகோணமலை பிரதேசத்தில் எல்லாப் பாடசாலைகளிலுமிருந்து ஆசிரியர்கள் பயிற்றப்பட்டனர். மட்டகளப்பில் 1998 இல் 61 பாடசாலைகளிலிருந்து 74 ஆசிரியர்கள் பயிற்றப்பட்டனர். நாட்டின் சூழ்நிலை காரணமாக 1999 இல் பயிற்சிகள் நடாத்தப்படவில்லை. இந்த ஆண்டு இப்போதுதான் ஆரம்பித்துள்ளோம்.

இந்த கல்வித் திட்டநடைமுறையில் சில முக்கிய அம்சங்கள் பின்வருமாறு.

- வட்டாரங்களில் பட்டறைகள் வைப்பதற்கு முன் சம்மந்தப்பட்ட அதிபர்கள் கூடும் கல்விப் பணிப்பாளரின் கூட்டம் ஒன்றில் இந்தத் திட்டத்தை 1 ½ மணிநேரம் அறிமுகப்படுத்துகிறோம். அந்தக் கூட்டத்திலேயே பட்டறையின் திகதியை பணிப்பாளர் தீர்மானித்து, அதிபர்களுக்கு அறிவிப்பார்.
- பட்டறையின் அறிமுக நிகழ்வில், கோட்ட பணிப்பாளரே தலைமை வகிப்பார்/
- பட்டறை, பயிற்சியாளரின் சமயங்களுக்கு ஏற்ப தேவாரம், கிறிஸ்தவ கீதம், இஸ்லாமிய பிரார்த்தனை ஆகியவற்றுடன் ஆரம்பமாகும். பட்டறையில் ஒரு மதத்தைச் சேர்ந்த ஒரு ஆசிரியரேனும் இருந்தால், அந்த மதத்தின் ஸ்தோத்திரம் செபிக்கப்படும்.
- பட்டறைக்கான செலவை சிற்றுண்டி, மதிய உணவு, கைநூல்கள் ஆகியன அந்த வட்டார சாயி நிலையத்தின் அன்பர்களே பொறுப்பேற்றனர். எமது கல்வித் திட்டத்திற்கு பிறநாடுகளிலிருந்தோ உள்நாட்டிலிருந்தோ எந்த ஸ்தாபனமும் உதவி தருவதில்லை. அது எமது கொள்கையாகவும் உள்ளது. ஆகவே ஆசிரியர்கள் தமது செலவிலேயே பட்டறைக்கு வருகிறார்கள் .
- பட்டறையின் பின் பயிற்ச்சியாளருக்கு சான்றிதழ் வழங்கப்படும். அதில் வட்டார கல்விப் பணிப்பாளரும், சத்திய சாயி கல்வித் திட்டத்தின் இயக்குநரும் கைச்சாத்திடுவர்.

இந்தச் சேவைக்கு, எமக்கு முழுமையான ஒத்துழைப்பைத் தந்த கல்வி அதிகாரிகளுக்கு நாம் நன்றி கூறுகின்றோம்.

எமது பயிற்சியின் பலாபலன்களை நாம் மதிப்பீடு செய்தோம். பயிற்சி முடிந்து ஒரு வருடம் பின் 80 ஆசரியர்களுக்கு வினாக்கொத்து அனுப்பினோம். 50 திரும்பி வந்தன. அவற்றிலிருந்து எமது

பெறுபேறுகள் மகிழ்வு தருவதாக இருக்கின்றன. ஆனால் திரும்பிவராத 30 இன் கதியை நாம் இன்னும் விசாரிக்கவில்லை.

இன்னும் ஒரு மதிப்பீட்டாக ஆசிரியர்கள் படிப்பித்த 119 பிள்ளைகளின் வீடுகளுக்கு எமது தொண்டர்கள் தரிசித்து வினாக்கொத்து மூலம் தகவல் அறிந்தனர். போதுவாக திருப்திதரும் அமசங்கள் உண்டு. ஆனால், இந்தக் கல்வித்திட்டத்தில் பெற்றோரையும் ஈடுபடுத்த வேண்டும் என்ற உண்மையை நாம் அறிந்து கொண்டோம். அப்போது கணிசமான வெற்றி அடையலாம்.

## மனித உன்னதத்தில் பல்கலைக்கழகத்தின் பங்கு

பாடசாலைகளிலே கற்பிக்கப்படும் மனித உன்னதத்திற்கான கல்விக்கு ஆய்வுசார் அனுசரணையும், சமூக அங்கிகாரமும் தரவேண்டியது பல்கலைக்கழகம் தான். அதற்கு எமது யாழ். பல்கலைக்கழகம் ஒரு முன்னோடியாக இருக்க வேண்டும். பாடசாலைகளிலிருந்து ஒழுக்கமாகவும் அடக்கமாகவும் வரும் மாணவர்கள், மேலும் மனித மேம்பாடுகளில் உயரவேண்டும், விழப்படாது. அதற்கு பல்கலைக்கழக ஆசிரியர்களின் வாழ்வே உதாரணமாக இருக்க வேண்டும். பல்கலைக்கழகத்தின் விபுலானந்த அடிகள் பற்றி கூறினேன். அவர் ஒரு தமிழ்ப் பேராசிரியர். தமிழ் தழுவிய ஒற்றுமையை எல்லா மதத்தினரிடையே நிலவச் செய்த உன்னத மனிதன் இன்னொருவர். அவர் பல்கலைக்கழக கல்வியாளர் தவத்திரு தனிநாயகம் அடிகள் ஆவார். அவர் தமிழையும் சமயத்தையும் நன்றாகப் பிணைந்துப் பேணியவர். அதற்காக இறைவன் அவரை நன்றாகவே படைத்திருந்தார்.

துறவிகள் அல்லாமல், குடும்பஸ்தராக வாழ்ந்து மனித மேம்பாடுகளுடன் உறவு கொண்ட சில உன்னதமான ஆசிரியர்கள் எமது பல்கலைக்கழகத்தில் இருந்திருக்கிறார்கள்.

இருவரின் பெயர்களை மட்டும் இங்கே கூறுவதனால், எனது மனம் நிறைவு அடைகின்றது. ஒருவர், நமது பல்கலைக்கழைகம் ஆரம்பித்த காலத்தில் அமரரான கணிதப் பேராசிரியர், உயர்திரு கனகசபாபதி அவர்கள், மற்றவர் சமீபத்தில் அமரரான பேராசிரியர் கைலாச நாதக் குருக்கள் ஐயா அவர்கள். இப்படியான ஆசிரியர்களினாலே தான் பல்கலைக்கழகம் உன்னதம் அடைகின்றது.

## முடிவுரையாக, ஒரு வேண்டுகோள் !

மதிப்பிற்குரிய துணைவேந்தர் அவர்களே, பல்கலைக்கழக அறிஞர்களே, அவையில் உள்ள பெரியோரே, எதிர்காலச் செல்வங்களே!

21ஆம் நூற்றாண்டு விஞ்ஞான மயமாக இருப்பதைத் தவிர்க்க இயலாது. விஞ்ஞானம் மனித மூளையின் அறுவடை. அது பழுதுபடாது மனிதனுக்கு உதவ வேண்டுமானால், மனிதனின் இன்னொரு சக்தி தேவைப்படுகிறது. அது தான் ஆத்மீகம்.

ஆத்மீக வாழ்வை வளர்ப்பதற்கு எமது பல்கலைக்கழகத்தின் எல்லா மதம் சார்ந்த துறைகளும் ஒத்துழைக்க வேண்டும். அதற்கு அடிப்படையான ஒரு அமைப்பாக ஒரு *ஆத்மீக பீடம்* எமக்கு இருக்க வேண்டும். A Faculty of Spirituality.

தற்போது இருக்கும் இந்து நாகரீகம், கிறிஸ்துவ நாகரீகம், இஸ்லாமிய நாகரீகம், அத்துடன் புத்த நாகரீகம் போன்ற துறைகள் அதில் தனித் தனியாகவே இயங்கும் அதே வேளையில், அவற்றின் ஒற்றுமையைப் பேணுவதற்கு, அவற்றை ஒரு பீடத்திற்குள் கொண்டுவருவதே ஒரே முறையாகும்.

ஆத்மீக பீடத்தின் கல்விச் செயற்பாடுகள் கலைப்பீடத்தில் மட்டுமல்ல, மற்ற எல்லாப் பீடங்களுக்கும் ஒரு அலகு என்ற முறையில் விரிய வேண்டும். உதாரணமாக, சுகம் என்றதன் வரைவிலக்கணத்தில் ஆத்மீக சுகம் என்பதையும் சேர்த்துள்ள மருத்துவ பீடத்தில், சமூக மருத்துவ துறையின் பாடவிதானத்தில் ஆத்மீகத்திற்கு ஒரு அலகை பொருத்தமாக சேர்க்க முடியும்.

எமது துணைவேந்தர் முன்னம் தலைமை வகித்த இரு பல்கலைக்கழக மேடைகளில், Faculty of Spirituality பற்றி பேசியுள்ளேன். What we want is not just Hindu Civilization, Christian Civilization, Islamic or Buddhist Civilization but the best of all of them as spiritual civilization. ஆம், எமது இன்றைய தேவை, ஆத்மீக நாகரீகம் ஆகும்.

ஆத்மீக கல்விக்கு அழுத்தம் தந்த பெருமகன் இராமநாதன் அவர்களின் நிறைவுப் பேருரையிலே, இந்த வேண்டுகொளை மீண்டும் உங்கள் முன் வைக்கிறேன். அப்படியான ஒரு பீடம்தான் . இந்த நாட்டின் மனித உன்னதத்திற்கான கல்விக்கு ஊற்றாகவும் உற்ற துணையாகவும் இருக்கும்.

நிறைவாக, சாயி பாபாவின் ஒரு அன்பு வாக்குடன் எனது உரையை முடிக்கிறேன்.

*ஒரே ஒரு சமயம் - அது அன்பின் சமயம்*
*ஒரே ஒரு மொழி - அது இதயத்தின் மொழி*



பேராசிரியர். செ.சிவஞானசுந்தரம்

*ஒரே ஒரு குலம் - அது மனித குலம்*
*ஒரே ஒரு கடவுள் - அவர் எங்கும் இருக்கிறார்*

ஆம், கடவுள் உங்கள் எல்லோரிலும் இருக்கிறார்.

**வணக்கம்.**

*அனுபந்தம் 1*

## மனித மேம்பாடுகளும், சில உப மேம்பாடுகளும்

### அன்பு (பிரேமை)

நட்பு
பக்தி
மனித நேயம்
நேர்மை
சகிப்புத் தன்மை
மிருகங்கள் மேல் பரிவு
தாய் நாட்டுப் பற்று

### சத்தியம்

உண்மை பேசுதல்
நன்மையை உணர்தல்
நியாயம் காணல்
புரிந்துணர்வு

சமநிலை
பகுத்தறிதல்
தன்னை அறிதல்
அறிவு தாகம்
ஆய்வு மனம்
மதங்களை மதித்தல்

**தர்மம்**

ஒழுக்கம்
சுத்தம்
நேர ஒழுங்கு
நேர்மை
கீழ்படிவு
விசுவாசம்
தொழிலுக்கு மதிப்பு
தியாகம்
சமத்துவம்
நீதி
துணிவு
முயற்சி
மற்றோரை மதித்தல்
உதவி செய்தல்
எளிமையான வாழ்வு

**சாந்தி**

அமைதி
தூய்மை
ஒழுங்கு
மனத்திருப்தி
பொறுமை
தன்னடக்கம்
தன்மானம்
தன்னம்பிக்கை
புரிந்துணர்வு
ஒத்திசைவு
சமாதானம்
ஒருமனப்பாடு
தியானம்

**அகிம்சை**

பரிவு

சமூக நீதி
இரக்கம்
சமூக சேவை
மன்னிப்பு
இயற்கை பேணல்
சகோதரத்துவம்
சூழல் தூய்மை
கூட்டுறவு
பிறசமய கலாச்சார மதிப்பு
பற்றற்ற நிலை
தேசிய ஒற்றுமை
உணவு பணம் சக்தி நேரம்
ஜனநாயக உணர்வு
வீண்விரயம் செய்யாமை
துன்பம் செய்யாதிருத்தல்

*அனுபந்தம் 2*

## யாழ் குடாநாட்டில் சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி ஆண்டு ஒன்று ஆசிரியர் பயிற்சி 1998

| கோட்டம் | பங்குபற்றிய பாடசாலைகள் | பங்குபற்றிய ஆசிரியர்கள் |
|---|---|---|
| மருதங்கேணி-பருத்தித்துறை | 31 | 39 |
| கரவெட்டி | 25 | 39 |
| கொடிகாமம் - பளை | 32 | 35 |
| நல்லூர் | 33 | 41 |
| சண்டிலிப்பாய் | 27 | 28 |
| சங்கானை | 24 | 30 |
| தெல்லிப்பளை | 15 | 17 |
| தீவகம் | 21 | 32 |
| சாவகச்சேரி | 39 | 45 |
| உடுவில் | 24 | 28 |
| யாழ்ப்பாணம் | 17 | 29 |
| கோப்பாய் | 28 | 34 |
| | 316 | 397 |

பயன்பெறும் மாணவர்கள் 9597



© பேராசிரியர். செ.சிவஞானசுந்தரம்

## நன்றியுரை

இந்த நினைவுப் பேருரையை கணனியில் பதித்த செல்வி மாலதி தியாகராஜா அவர்களுக்கும், Overhead Projector இல் காட்டுவதற்கான Transparencies ஐ தயாரித்து, பேருரையின் போது அவற்றை தகுந்தவாறு காட்டிய திருமதி மலையரசி சிவராஜா அவர்களுக்கும் எனது நன்றி உரித்தாகும்.

# References


1. ஆறுமுகம், வ *இருபதாம் நூற்றாண்டு இலங்கையில் கல்வியும் தேசிய ஒருங்கிணைப்பும்,* சேர் பொன்னம்பலம் இராமநாதன் நினைவுப் பேருரை, 19.10.99, யாழ் பல்கலைக்கழகம், யாழ்ப்பாணம், யாழ்ப்பாணம், 1999, பக் . 24.
2. Vythilingam, M., *The life of Sir Ponnambalam Ramanathan*, Vol 11, Thirumakal Press, Chunnakam, Sri Lanka, 1977, p 451.
3. Ibid., p 331.
4. Swami Ranganathananda , *Eternal Values for a changing Society*, Bharatiya Vidya Bhyavan, Bombay, p 530.
5. Ibid., p 531
6. Ganguli, H.C. et al., *Values, moral* education and social studies, in
   Howard, D.Mehlinger (ed.), UNESCO Handbook for the teaching of social studies, UNISCO, Paris, 1981, ch 8.
7. Rahula, S.P: in Sai Baba and His Message, Ed: Satya Pal Rahula and Divane Robinson, Vikas Publishing Honse, Pvt Ltd., New Delhi, 1976.
8. Bronowski, J ., The Ascent of Man, Futura Macdonald & Co., London, 1973, p 254.
9. Vithilingam, M, Vol II, op. Cit., p 659.
10. Swami Ranganathananda, op.it., p 387.
11. சொக்கலிங்கம் , க. (சொக்கன் ) ,*இந்து நாகரீகம்,* பாகம் 3, ஸ்ரீ சுப்பிரமணிய புத்தகசாலை, யாழ்ப்பாணம், 1997, அத் . 8.
12. Muthucumaraswamy, V., Sri La Sri Arumuga Navalar, a biographical study, 1965, Ch. 4 & 20.
13. சி.இ. (சி. இராமலிங்கம்) , *கலைக் களஞ்சியம்,* தொகுதி இரண்டு, தமிழ் வளர்ச்சிக் கழகம், சென்னை , 1955, பக். 67.
14. சுப்பிரமணியன் , நா. சூ கௌசல்யா சுப்பிரமணியன், *இந்திய சிந்தனை மரபு,* சவுத் ஏசியன் புக்ஸ், சென்னை, 1993, பக் . 151.
15. Swami Ranganathananda, op. Cit., p 587-88.
16. Pavitra (P.B. Saint Hilaire), Education and the Aim of Human Life, Sri Aruobindo International Centre of Education, Pondicherry, Fifth Edition, 1991. Ch. 4 (Quotes Rabindranath Tagore, Personality, Chapter 'My School')

17. Ibid., p.52.
18. சந்திரசேகரம், ப., *கல்வியற் கோவை*, யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் , 1987, பக். 39.
19. பா.மு.க.மு. (பாரதவாஜி முகவைக் கண்ண முருகனார்) , *கலைக்களஞ்சியம்*, தொகுதி இரண்டு, தமிழ் வளர்ச்சிக் கழகம், 1955, பக். 53-53.
20. நந்தி ( செ. சிவஞானசுந்தரம்) , *சாயியின் குரலும் வள்ளுவர் குறளும்*, சுடர் ஒளி பதிப்பகம், கொழும்பு, 2000, பக். 10.
21. National Education Commission Reforms in General Education, - Sri Lanka, 1997, p ii & 17-18.
22. Neeta Khanna, Bhagavan Sri Sathya Sai Baba's concept & programmes in Education in Human Values, St. Bede's College, Shimla, 2000. (gives short extracts of commission reports and references).
23. Alvin Toffler, Future Shock, Bantam Books, New York, 1971.
24. உதயன், நாள் இதழ் . யாழ்ப்பாணம், 20.9.2000 ரூ 27.9.2000.
25. The New Hutchinson 20th Century Encyclopedia, Hutchinson of London, 1977, p 617 & 891.
26. சந்திரகாந்தன் , ஏ.ஜே.வி., *தமிழ்ப் பண்பாட்டில் கிறிஸ்தவம்*, கிறிஸ்தவ மன்றம், யாழ் . பல்கலைக்கழகம், திருநெல்வேலி, 1993. பக். 67.
27. Carla Risseuw , in Antony Copley (ed.), Gurus and their followers, Oxford University Press, New Delhi, 2000, p. 201.
28. இந்து சாதனம், புத்தகம் 111, இதழ் 05, 14.08.2000, முன்பக்கம். (ஆசிரியர் : பேராசிரியர். இ. குமாரவடிவேல் ).
29. Art-ong Jumsai Na Ayudhaya , The Five Human Values and Human Excellence, International Institute of Sathya Sai Education , Bangkok, 1977.
30. Teerakiat Jareonsttasin, Sathya Sai Education, Philosophy and Practice, I.I.S.S.E. Bangkok, 1977.
31. Art-ong Jumsai, Integration of Human Values in Sciences and Mathematics, I.I.S.S.E., Bangkok, 1997.
32. Loraine Burrows, Integration of Human Values in the Arts and Extra-Curricular Activities, I.I.S.S.E. , Bangkok.
33. Teerakiat Jarenonsettasin, Sathya Sai on parenting, I.I.S.S.E., Bangkok, 1998.
34. Loraine Burrows, Discovering the Heart of Teaching, I.I.S.S.E., Bangkok, 1977.

35. Vithilingam, M., op.cit, Vol. I, p.190.
36. Ibid, p.221.



**வாழ்நாட் பேராசிரியர் (Professor Emeritus) செல்லத்துரை சிவஞானசுந்தரம்.**

பேராசிரியர் செ. சிவஞானசுந்தரம் யாழ். பல்கலைக்கழக மருத்துவ பீடத்தில் சமூக மருத்துவப் பேராசிரியராகவும், பீடத்தின் தலைவராகவும் இருந்தவர்.

அவர் இலங்கைப் பல்கலைக்கழத்தின் மருத்துவப் பட்டதாரி (1955). பின்பு லண்டன் பல்கலைக்கழத்தில் பொதுச் சுகாதார டிப்ளோமாவும், Ph.D (Epidemiology) பட்டமும் பெற்றார். 1995இல் எமது பல்கலைக்கழகம் அவருக்கு D.Sc. பட்டமளித்துக் கௌரவித்தது.

இலங்கை சுகாதார அமைச்சின் வைத்திய சாலைகள், சுகாதார அலுவலகங்களில் பத்து வருட காலம் சேவை செய்த பின், பேராதனைப் பல்கலைக்கழத்தில் சேர்ந்து 14 வருடங்கள் சமூக மருத்துவ விரிவுரையாளராகவும் இணைப் பேராசிரியராகவும் கடமையாற்றினார். அதன் பின்பு 1979இல் யாழ். மருத்தவப் பீடத்தின் முதலாவது பேராசிரியராகவும் நியமிக்கப்பட்டார்.

அவர் அவ்வப்போது உலக சுகாதார ஸ்தாபனத்தின் (WHO) சுகாதார முறை ஆய்வின் (Health Systems Research) ஆலோசகராக இந்தியா, ஜோர்தான், சிம்பாவே, மலேசியா, வங்களாதேசம், வடகொரியா, மொங்கொலியா, மியன்மார் ஆகிய நாடுகளில் கடமையாற்றியுள்ளார்.

அவர் பல சமூக, மருத்துவ ஆய்வுக் கட்டுரைகள் எழுதியவர். உலகின் பல மருத்துவ கருத்தரங்குகளில் பங்குபற்றியவர். அவர் 1999 இல் மருத்துவ மாணவர், மருத்துவர்களுக்காக எழுதிய LEARNING RESEARCH என்ற பாடநூல் மருத்துவ சமூகத்தினரால் போற்றப்படுகின்றது.

தமிழ் எழுத்து உலகில் அவர் *"நந்தி"* என்ற புனைபெயரில் மிகவும் அறியப்படுபவர். மலைக்கொழுந்து, தங்கச்சியம்மா, நம்பிக்கைகள், ஆகிய நாவல்களையும், மூன்று சிறுகதைத் தொகுதிகளையும் படைத்துள்ளார். இரு நாவல்கள் இலங்கை சாகித்திய மண்டலப் பரிசு பெற்றவை.

சாதாரண மக்களுக்கு நான்கு சுகாதார நூல்கள், சிறுவர்களுக்கு அறிவுரை நூல்கள், நாடக நூல் என அவரது 14 நூல்கள் வெளிவந்தள்ளன. இவ்வருடம் *"சாயின் குரலும் வள்ளுவரின் குறளும்"* என்ற மனித மேம்பாட்டு நூலை வெளியிட்டுள்ளார்.

பேராசிரியர் சிவஞானசுந்தரம் ஆத்மீகத்தில் ஈடுபாடு உடையவர். அவர் ஸ்ரீ சத்திய சாயி மனித மேம்பாட்டுக் கல்வி தமிழில் புகட்டுவற்கு, இலங்கையின் தேசிய ஆலோசகராக இருக்கின்றார். அவர் *"சாயி மார்க்கம்"* என்ற ஆன்மீக காலாண்டுச் சஞ்சிகையின் ஆசிரியராவர்.

Computer Printing & Published by: Registrar's Office, University of Jaffna
Sri Lanka